சி.க
Rs. 176

23

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதி

(குறிப்புரையுடன்)

அவ்வை
நூலகம்.
தமிழியல்துறை

கர — சித்திரை — ஆயிலியம்

1951.

திருவாவடுதுறை யாதீன வெளியீடு — 39.

23

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
திராவிடமாபாடிய கர்த்தராகிய
ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்
அருளிச்செய்த

# கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதி.

அவ்வாதீனத்து
இருபத்தொன்றாவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி

அவ்வாதீன வித்துவான்
த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால்
பரிசோதித்து
எழுதப்பட்ட குறிப்புரையுடன் அச்சிடப்பெற்றது.

உரிமை பதிவு.

கர — சித்திரை — ஆயிலியம்
1951.

உ

# முகவுரை.

" கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணெ
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ."

**ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.**

*அந்தாதி என்பது இரண்டு அடிகளுக்கும், இரண்டு செய்யுட்களுக்கும் இடையே காணப்படும்; இவற்றுள் இரண்டு அடிகளுக்கிடையில் அமைவதை அந்தாதித் தொடை என்பர். இரண்டு செய்யுட்களின் இடையில் அமைவதைச் செய்யுள் அந்தாதி எனக் கூறுவர். ஒன்றன் அந்தம் அடுத்ததன் ஆதியாக வந்தலின் இப்பெயர் பெற்றது. இது வடசொற் புணர்ச்சி. தமிழ் நூல் வகைகளில் இவ்வந்தாதிகள் தொடர்நிலைச் செய்யுட்களில் ஒன்றாகிய சொற்றொடர் நிலையின்பாற் படும். "செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே" என்பது தண்டியலங் காரம்.*

*செய்யுளந்தாதி ஒருசெய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தேனும் அசையேனும், சீரேனும், சொல்லேனும், அடியேனும் அடுத்த செய்யுளின் முதலில் வருவது. நூலினது ஈற்றுச் செய்யுளின் இறுதி முதற் செய்யுளின் முதலோடு ஒன்றி வரும். இதனை மண்டலித்தல் என்பர்.*

வெண்பாவாலேனும், விருத்தத்தாலேனும், கட்டளைக்கலித்துறையாலேனும் இவ்வந்தாதிகள் இயற்றப்படும். அந்தாதி நூல்கள் பெரும்பாலும் நூறு செய்யுட்களை உடையன. அத்தொகையிற் குறைந்த செய்யுட்களையுடைய நூல்களும் சில உண்டு. செய்யுட்களில் அமைந்த எதுகை பற்றிய இரண்டு வகை அந்தாதிகள் உண்டு. அவை திரிபந்தாதி, யமகவந்தாதி என்பன. இவற்றுள் நான்கடிகளிலும் முதலில் முதலெழுத்தை யொழிந்த ஏனைய எழுத்துக்கள் பல ஒன்றிவரின் அது திரிபந்தாதி யாகும்; அம் முதலெழுத்தும் ஒன்றிவரின் யமக அந்தாதியாகும். யமகத்தைத் தமிழில் மடக்கு என்பார்.

இனி, பத்துப் பத்துப் பாட்டுக்கு ஓர் யாப்பாகப் பத்து வகைச் செய்யுட்களால் இயற்றப்படுவதாகிய ஒருவகை அந்தாதி உண்டு. அது பதிற்றுப்பத்தந்தாதி என வழங்கப்படும். திருவாசகத்திலுள்ள திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் முதலியன அந்தாதி அமைப்புடையன. பதினோராந்திருமுறையிலே எட்டு அநதாதிகள் உள்ளன. அந்தாதி நூல்கள் தமிழ் கற்கும் மாணவர்கட்கு நினைவு ஆற்றலைப் பெருக்கிப், பல புதிய சொற்களையும், பதங்களைப் பிரித்துப் பொருள் கொள்ளும் முறையையும், பிறவற்றையும் கற்பிப்பதற்கு உரிய கருவிகளாக இருப்பன. முற்காலத்துப் பிரபந்தங்கற்போர் அந்தாதி, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ் என்னும் இந்த வரிசையிலே ஒவ்வொன்றிலும் பல நூல்களைப் பாடங் கேட்பதுண்டு. இக்காலத்து அம்முறை அருகிவருகிறது.

கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதியாகிய இப் பிரபந்தத்தைச் செய்தருளியவர்கள் இவ்வாதீனத்துக் குல தெய்வமாகப் போற்றப்படும் திராவிடமாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் ஆவார்கள். இந்நூலாசிரியராகிய சுவாமிகள் பெயரைக் கூறவே இதன் பெருமை நன்கு புலனாகும்.

சிவஞான அருளாளர்களாகிய சுவாமிகள் அருளிச்செய்த நூல் கட்கு உரை செய்யவேண்டிய தகுதி வாய்ந்த பெரியோர்கள் சும்மா இருந்து விட்டனர். சுவாமிகள் அருளிய நூல்களை யெல்லாம் தொகுத்து மதுரை ஸ்ரீ ஞானசம்பந்தப் பிள்ளை யவர்கள் திருவேகம்பரந்தாதி, திருமுல்லைவாயி லந்தாதி என்னும் இரண்டு அந்தாதிகட்கு மட்டும் பதவுரை எழுதிச் சேர்த்து சென்ற விரோதி ஆண்டிலே ஸ்ரீமான்—பாண்டித்துரைத் தேவர் அவர்கள் விரும்பியவண்ணம் அச்சிட்டு உலகுக்கு உப கரித்தார்கள். பின்பு, இவ்வாதீனத்துப் பதினேழாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் கட்டளை யிட்டருளியபடி நந்தன ஆண்டிலே ஷை ஞானசம்பந்தப்பிள்ளை யவர்கள் இரண்டாம் பதிப்பாக வெளியிட்டார்கள். இவ் விரண்டு பதிப்புப் புத்தகங்களும் கிடைப்பது மிக மிக அரிதா யிருந்த காலத்திலே திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பெருமுயற்சியும், பெரும்பொருளும் செல விட்டு சுவாமிகள் பிரபந்தத்திரட்டை வெளியிட்டார்கள். சில நூல்கட்குச் செவ்விய முறையிலே உரை எழுதுவித்து அச்சிட்டு உபகரித்தனர். அவர்கள் செய்த உதவி மிகப் போற்றுதற்குரியது. அவைகளில் சில நூல்கட்கு, எளியேனுக்கு முன்பு இவ்வாதீன வித்துவானாக விளங்கி இருமொழிப்புலமை யும் ஒருங்கே பெற்றிருந்த சைவத்திரு. சிதம்பர ராமலிங்கம் பிள்ளையவர்கள் இவ்வாதீனத்துக்கு வருவதன் முன் அரும் பொருள் விளக்கம் எழுதிக்கொடுக்க அவைகளையும் அக்கழகத் தார் வெளியிட்டனர். அவர்களே இப்பிரபந்தங்கள் எல்லாவற் றிற்கும் உரையெழுதி வெளியிட்டிருப்பின் சைவ உலகுக்கு மிகப்பயன் விளைக்கும். இவ்வாதீனத்துக் கல்வியை முறையே பெற்றுச் சித்தாந்த சாஸ்திரங்களாகிய மெய்கண்ட சாஸ்திரங் களிலும் இவ்வாதீனத்துப் பண்டார சாஸ்திரங்களிலும் சிறந்த பயிற்சியும், நுண்மாண் நுழைபுலமும், சைவதவ வொழுக்க

மும் ஒருங்கே கொண்டு வடமொழிப்புலமையும் திடமுறப் பெற்றிருந்த சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ இலக்கணம்—முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள் வெளியிட்டிருப்பார்களாயின் சிவஞானசுவாமிகளே மீண்டும் எழுந்தருளி மூலத்துக்குத் தக்க உரையையும் வரைந்தருளினார்களோ என்று போற்றத்தக்க நிலையிலே அமைந்திருக்கும். அச்சிவபுண்ணிய வாய்ப்புக்கள் சைவவுலகுக்குக் கிட்டவில்லை. என் செய்வது !

ஒன்றுக்கும் பற்றாத நாயினேனுக்கு அப்பொறுப்பு உளதாயிற்று. ஸ்ரீ பஞ்சாக்கர பரமாசாரியர் ஆதீனமெங்கே! பாழ்ம்பிறப்பினேன் பணியெங்கே!! வடமொழிக்கடலும் தென் தமிழ்க்கடலும் நிலைகண்டுணர்ந்த திராவிடமாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகளெங்கே! அவஞானமுடையேன் அறிவெங்கே !! இந்த நூலைச் 'சிந்திக்கும் பெருந்தவ வருவாய் ஒருவழியாற் கிடைத்த' தென எண்ணியே குறிப்புரை என ஒன்றெழுதி வெளியிடத்துணிந்தேன். இதனைக் குறிப்புரையுடன் வெளியிடுமாறு கட்டளையிட்டருளிய திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து 21—வது குருமஹா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் பெருங்கருணை போற்றுதற்குரியது. அறிஞருலகம் என் அறியாமையைப் பொறுத்தருள வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

திருவாவடுதுறை, 22—4—51.

த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,
ஆதீன வித்துவான்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## கலைசைப்

# பதிற்றுப் பத்தந்தாதி

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்

1951.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கலைசைப்

# பதிற்றுப்பத்தந்தாதி.

## காப்பு.

பருமாலை விரைவீதித் திருத்தொட்டிக் கலைப்பதிற்றுப்
பத்தந் தாதித்
திருமாலை யெமையாளுஞ் சிவபெருமான் றிருவடியிற்
சேர்க்க நல்கும்
பொருமாலைக் கயமுகனைக்குடர்குழம்பத்துகைத்துருட்டிப்
புரட்டி நாயேன்
கருமாலைத் துரந்தருள வெழுந்தருளுஞ் செங்கழுநீர்க்
களபந் தானே.

## நூல்

திருமால் பிரமன் றெளியா தழலா
யருமா லுறநீண் டருளங் கணனெம்
பெருமான் கலைசைப் பதிபே ணியவா
விருமா மலமற் றெளியே னுயவே. 1

உய்யும் படியொன் றுணரே னையுமான்
கையன் கதியன் கலைசைப் பதிவாழ்
மெய்யன் விமலன் விடையே றியவென்
னையன் வலித்தாண் டதுமற் புதமே. 2

புதியான் பழையான் புறத்தா னகத்தான்
முதியா னிளையான் முதலான் முடியான்
பதியாங் கலைசைப் பகவன் பெருமை
மதியா லெவர்தே றிடவல் லவரே. 3

வல்லாண் மைசெலுத் துமலத் துயராற்
பொல்லா நிலையிற் பொறிகெட் டுழல்வேன்
கல்லா னிழலாய் கலைசைப் பதியா
யெல்லா மறவென் றுனையெய் துவதே. 4

தேறாய் கலைசைச் சிவனே யிறையென்
றேறாய் சிவலோ கமிடும் பையெலாம்
பாறாய் பதமஞ் சும்விதிப் படியே
கூறா யருளே குறியாய் மனமே. 5

மனைமக் கள்கடும் புமடந் தையர்பொன்
னெனவிப் படியெய் திமயக் கியிடுந்
தனையொப் புறுமா யைவிலா சமெலாங்
கனவிற் கழியாய் கலைசைக் கிறையே. 6

இறையுந் தரியே னினியிவ் வுடலப்
பொறைதா னுனையல் லதுபோக் கறியேன்
முறையோ முறையோ வருளாய் முதல்வா
நிறைநீர்க் கலைசைப் பதிநின் மலனே. 7

மல்கும் புலவே டர்மயக் கமருண்
டொல்குஞ் சிறியே னையுமுன் னடிசேர்த்
தல்கும் படியென் றருள்வாய் வளமே
பல்குங் கலைசைப் பதிகா வலனே. 8

காவாய் சிவனே சரணங் கலைசைத்
தேவா சிவனே சரணஞ் சிறியேன்
ஆவா சிவனே சரண மருளே
தாவா சிவனே சரணஞ் சரணம். 9

சரணம் புகும்வா னவர்தாங் களெலா
மரணம் புகுதா தருள்வைத் துவருங்
கரளந் தனையுண் டனைகாத் தருளா
யரணம் புடைசூழ் கலைசைக் கரசே 10

## வேறு.

அருவுருவங் கடந்துநிறைந் தானந்தப் பரவெளியாய்
மருவுபெருஞ் சிவபோக வாரிதியிற் றுளைந்தாடி
யிரவுபக லற்றிருக்கு மிவ்வாழ்வை யெனக்களித்தாய்க்
குருகிமனங் கரையகிலேன் றிருக்கலைசை யுத்தமனே. 11

உத்தியரா வகலல்கு லொள்ளிழையார் முலைத்தடத்தே
பித்துமிகுந் திழிவேனைப் பிறழாமே தடுத்தாண்ட
வத்தனே யுனையிழந்து மாவிதரித் துய்வேனோ
கொத்தலர்பூம் பொழிற்கலைசைக்குலநகர்வாழ்கோமானே.

மான்போலும் விழிசாயன்மயில்போலுமடந்தையர்சொற்
றேன்போலு மெனப்பிதற்றித் திரிவேனை யாட்கொண்
[டாய்
நான்போலு மடிமையுமற் றுன்போலு நாயனுந்தான்
மீன்போர்செய் வயற்கலைசை வித்தகனே கிடையாதே. 13

கிடையாத பெருவாழ்வு கிடைத்திருந்துங் கைவிட்டு
முடையான வுடலோம்பி மூர்க்கனாய்த் திரிந்துழலுங்
கடையேனைக் கடைபோகக் காப்பதுநின் கடனன்றோ
நடையாளுந் திருக்கலைசை நகர்மேவும் பரம்பொருளே. 14

பரந்தெழுமுன் றிருவருளே பார்த்துமனங் குழைந்துருகி
நிரந்தரமா யன்புசெயா நீசனேன் றனக்கந்தோ
புரந்தரன்மா லயன்முதலோர் புகலரும்பே றளித்தருளி
யரந்தைதவிர்த் தனையென்னே திருக்கலைசையாண்டானே.

ஆண்டாய்நீ யுனக்கடியே னானே னா னினியென்னை
வேண்டாது வெறுத்திடவும் விதியுண்டோ கீழ்மேலாய்
நீண்டானே திருத்தொட்டிக் கலைமேவு நின்மலனே
தூண்டாத விளக்கொளியாய்ச் சுடர்பரப்புந் தொல்
[லோனே. 16

தொல்லைவினைத்தொடக்குண்டு சுடுநெருப்பினரவேய்ப்ப
அல்லலுறும் புலையேனை யாவாவென் றளித்தருளாய்
எல்லையறுத் தூடுருவி யெங்கணுமாய் நிறைந்தருளிச்
செல்வமலி கலைசையில்வாழ் சிவானந்தப் பழங்கடலே. 17

பழங்கணுற வெகுண்டெழுந்து பகடேறிப் படை
[யெடுத்துத்
தழங்குபெருஞ் சேனையொடுந்தருக்கிவருங்கொடுங்காலன்
முழங்குமொலி கேளாமுன் மூரிவிடை மிசையேறி
யழுங்கேலென் றெதிர்ந்தருளா யருட்கலைசைப்பதியானே.

பதிகடொறுஞ் சென்றேத்திப் பயின்மூவர் தமிழ்மாலைப்
பதிகமெலா மங்கங்கே பாடியுளங் களிகூரும்
பதிகரோடு மெனைக்கூடப் பணித்தருளா யிமையவர்தம்
பதிகளுக்கும் பதியாகிப் பதிக்கலைசைப் பதியானே. 19

யானென்று மெனதென்று மிச்செருக்கி லெழும்வினையா
லூனொன்றிப் பொறிவழிபோ யுலவாத யோனிதொறுந்
தானொன்றி யிதுகாறுந் தளர்ந்தொழிந்தேனினியிரங்காய்
தேனொன்று மலர்ச்சோலைத் திருக்கலைசை யுடையானே.

## வேறு.

உடைந்துநைந்து நெக்குநெக்கு ளங்குழைந்து சின்மயத்
தடைந்துகண்ண சும்பிருந்து தாரைபாய வன்புநீர்
குடைந்துவாழு மன்பர்சிந்தை கோயில்கொண்டு
[வாழ்வரான்
மடந்தைபாக மாய்க்கலைசை வாழ்சிதம்பரேசரே. 21

சிதம்பரேசர் சோலைசூழ்ந்த தென்கலைசை நாயகர்
கதம்பராவு காமனோடு காலனைக்கடிந்தவர்
பதம்பராவி யேத்துமன்பர் பாதபங்க யங்கள்சந்
ததம்பராவி யேவலிற்ச ரிப்பரண்ட வாணரே. 22

அண்டரண்ட ரூடறுத்த கம்புறம்பு மேகமாய்
மண்டியெங்க ணும்பரந்த வின்பவாரி தன்னுளே
தண்டலைக்க லைசைவாழ்சி தம்பரேசர் தம்முருக்
கண்டுகொண்டு போற்றவல்ல காட்சியாளர் செல்வரே.

செல்வமென்ன கீர்த்தியென்ன சித்தியென்ன கற்றிடுங்
கல்வியென்ன வீங்கிவற்றி னற்பயன்கள் காண்பரோ
நல்லதென்க லைசைமேய நாதனன்பர் நாமமே
சொல்லியேத்தி யேவல்செய்தொ ழும்பர்காண வல்லரே.

வல்லவண்ணம் வாழ்கலைசை வானவர்க்க டித்தொழில்
அல்லுமெல்லு மாற்றுமன்பர் வேண்டிலஞ்சு பூதமு
மொல்லைமாற்றி வேறுசெய்ய வல்லரும்பர் மாலயன்
றொல்லைவான்ப தங்களுந்து ரும்பெனக்க ழிப்பரே. 25

பரந்தெழுந்து முப்பதிற்றி ரண்டுபல்லை யுந்திறந்
திரந்துபுல்லர் வாயிறேறு மின்றுகாறு மெவ்வமுற்
றரந்தையால ழிந்துளேனி தாற்றிலேனெ னையனே
வரந்தராய்க லைசைவாழ்சி தம்பரேச வள்ளலே. 26

வள்ளலென்று பாரியென்று மாரியென்று வீணிலே
யெள்ளளவு மீகிலாரை யேத்தியேத்தி யாயுளைத்
தள்ளுவீர்க லைசைவாழ்சி தம்பரேசர் கீர்த்தியைத்
தெள்ளியோது கிற்கிலீர்க ணன்று நுங்கள் செய்கையே.

கைகள்கொண்டு நொச்சியைக்க ரந்தையைப்ப றித்தணிந்
தையனேயி ரங்கெனத்து தித்திறைஞ்சி லண்டரு
மெய்தரும்ப தத்திலுய்க்கு மெம்பிரான்க லைசைவாழ்
சைவனென்ற றிந்திலார்ச ழக்குரைத்து மாய்வரே. 28

மாய்வதும்பி றப்பதும்வ ளர்ந்துமங்கை மார்முலை
தோய்வதும்பு லன்வழிச்சு ழல்வதும்பி ணியினாற்
றேய்வதும்ப வந்தொறுமெ னக்கமைத்த செல்வனே
ஆய்கலைக்க லைசைமேவு மையவாழி வாழியே. 29

வாழ்வுமிக்க தென்கலைசை வாணநின்னை யேசிலர்
ஆழியங்கை மாயனென்ப ரம்புயத்த னென்பர்தேன்
வீழ்கடுக்கை யீசனென்பர் வெய்யவங்கி யென்பர்மா
வேழ்பரித்த தேரினண்ண லென்பர்மாயை யாலரோ. 30

## வேறு

மாய னுயினை மறையவ னுனுய்
மன்னு யிர்த்தொகை யனைத்தையு மொடுக்கும்
பாயு மால்விடை யுருத்திர னுனுய்
பன்னு மூவர்க்கு மூலமாய் நின்ருய்
ஞேய மாயினை ஞாதிரு வானுய்
நிகழு ஞானமு மாயினை யெந்தாய்
வேய தோளுமை பங்குறை நீல
மிடற்ற னேதிருக் கலைசையுத் தமனே. 31

தமோகு ணத்தினிற் றிருவுருத் தரித்துச்
சத்து வத்தொழில் பூண்டநா ரணற்குந்
தமோகு ணத்தொழி லழிப்பினைப் பூண்டு
சத்து வத்துருத் தரித்தசங் கரற்குந்
தமோகு ணத்துரு திராசதத் துருவந்
தாங்கி யக்குணத் தொழிலுறு மயற்குந்
தமோம யத்தினிற் றமியனுங் கலைசைத்
தாணு நீயிறை யாயிருந் தனையே. 32

ஆயி ரஞ்சிர மாயிர முடிக
ளாயி ரஞ்செவி யாயிரம் விழிகள்
ஆயி ரம்புய மாயிரஞ் சரண
மாயி ரங்குண மாயிரந் தொழில்கள்
ஆயி ரம்பெய ருடையநின் பெருமை
யைய வென்மொழிக் கடங்கு மோபத்தி
யாயி ரந்தவர்க் காயென வுதவு
மங்க ணுதிருக் கலைசைமுக் கணனே. 33

முக்கு ணங்களின் மூவரைத் தோற்றி
மூவ ருக்குமுத் தொழில்வகுத் தருளி
அக்கு ணங்களுக் கதீதமாய் நிறைவா
யத்து வாக்களைக் கடந்துமே லுலகிற்
றக்க நற்கண நாதரேத் தெடுப்பச்
சத்தி யம்பிகை யுடனரு ளுருவாய்த்
தொக்க கோடிசூ ரியருத யம்போற்
றோன்றி நின்றனை கலைசைவிண் ணவனே. 34

விண்ண வர்க்கெலா முன்னமுன் னிடத்தே
வேத னைப்படைத் தருளினை யவனுக்
கெண்ணு வேதசாத் திரபுரா ணங்க
ளவையு மோதுவித் தனையவன் றன்பாற்
கண்ண கன்புவி காத்தழித் தருளுங்
கடவு ளோர்தமைத் தந்தனை கலைசை
யண்ண லேயெலா முன்றிரு விளையாட்
டாகு மாலுல கினுக்கொரு முதலே. 35

ஒருகற் பத்தினி லரனைமுன் படைப்பா
யொருகற் பத்தினி லரியைமுன் படைப்பாய்
வருகற் பத்தினி லயனைமுன் படைப்பாய்
மறுகற் பத்தினின் மூவரை யொருங்கே
தருவை முற்படப் பிறந்தவர் பிறரைத்
தரவுஞ் செய்குவை நின்றிரு விளையாட்
டருள்ப முதததென் கலைசைவாழ் முதலே
யார றிந்தெடுத் தோதவல் லவரே. 36

வல்ல வானவர் கடல்கடை பொழுதின்
மறுக வந்தெழு மாலகா லத்துக்
கொல்கி யாவரு மோட்டெடுத் துலறி
யோல மிட்டெமக் குறுசர ணுனையே

யல்ல தில்லையென் றரற்றிடு மங்நா
வஞ்ச லீரென வல்லனீ யல்லா
வில்லை வேறெனிற் கலைசைவா னவநா
னெவர்க்க டைக்கலம் புகன்றுபோற் றுவனே.

போற்றி செங்கதிர் மண்டலத் துறைவோய்
போற்றி சோமலோ கத்தமர் முதல்வா
போற்றி யன்பர்தம் மனக்குகை யுடையாய்
போற்றி யாரமுற் சிகைநுனி யமர்வோய்
போற்றி நாரண னகத்தொளிர் விளக்கே
போற்றி தில்லையம் பலத்துநின் ருடி
போற்றி யென்றனைப் பதித்தசெஞ் சரணு
போற்றி தென்றிருக் கலைசைவா னவனே. 38

வானு ளோர்களும் மறைகளு மின்னம்
வருந்தி நேடியும் வரம்புகண் டறியா
தின முற்றலைந் துழன்றிடிற் சிறியே
னேத றிந்துனைப் பாடுவ னெந்தாய்
கானு லாமலர்க் குழலுமை பாகா
கலைசை மாநகர் மேவிய வமுதே
தேனு லாமலர்க் கொன்றையஞ் சடையாய்
திரிபு ரங்களைச் சிரித்தெரித் தவனே. 39

சிரித்தெ ரித்தனை புரங்களை விழியைத்
திறந்தெ ரித்தனை மாரனை யுகிரா
லுரித்து டுத்தனை யுழுவையைச் சரணு
லுதைத்து ருட்டினை காலனை விரலா
னெரித்த ழித்தனை யரக்கனை யென்பார்
நின்ற யாவையு நீங்குநா ளொருங்கே
பொரித்தெ ரித்திட வல்லதென் கலைசைப்
புண்ணி யாவுனக் கிவையுமோர் புகழோ. 40

## வேறு

புகழ்ந்த வருக்கருள் பூங்கலை சைக்கோ
னகழ்ந்து பறந்தவ ரண்ணல னென்பார்
மகிழ்ந்துயர் கூடலின் மண்கள் சுமந்தே
யிகழ்ந்தடி பட்டன னென்பது மென்னே. 41

என்னையு மாளு மிருங்கலை சைக்கோன்
மன்னுல குக்கொரு மன்னவ னென்பார்
மின்னிடை யார்மனை யெங்கணு மேவி
யன்ன மிரந்தன னுவது மென்னே. 42

ஆவகை யன்பரை யாள்கலை சைக்கோன்
மூவரு மேவல்செய் முன்னவ னென்பார்
நாவலர் கோன்விட நள்ளிரு ளின்க
ணேவலி னேகின னென்றது மென்னே. 43

என்மன மேவு மிருங்கலை சைக்கோன்
பன்மறை யும்மறி யாப்பர னென்பார்
கொன்மிகு கூளிகள் கண்டுகை கொட்ட
அன்னட மாடின னுமிது வென்னே. 44

ஆமையி னோடணி யக்கலை சைக்கோன்
காம மறுத்தவர் கண்ணுள னென்பார்
தாம மலர்க்குழல் கொங்கைக டாக்கக்
கோமள மேனி குழைந்தமை யென்னே. 45

குழைத்தெனை யாண்டருள் கூர்கலை சைக்கோன்
வழுத்தபு கீர்த்தியின் மாமலை யென்பார்
இழித்த புறச்சம யத்தவ ரெல்லாம்
பழித்திட நின்றருள் பான்மையி தென்னே. 46

பான்மதி சூடுப ரன்கலை சைக்கோன்
மான்முத லோர்தொழு மாமுத லென்பார்

மேன்மையில் வாணன் வியன்பதி வாயிற்
கான்மலை மாதொடு காத்தமை யென்னே. 47

தமைத்தெளி வோர்தெளி தண்கலை சைக்கோன்
அமைப்பரு மாகரு ணகர னென்பா
ரிமைக்குமு னண்ட மெவற்றையு மொக்கக்
குமைத்திடு மச்செயல் கொண்டிட லென்னே. 48

கொண்ட லுரிஞ்செயில் கூர்கலை சைக்கோன்
அண்ட மெவற்றினு மப்புற னென்பார்
மண்டனில் விண்டனில் வான்றனில் யாருங்
கண்டிட நின்றுழல் காரண மென்னே. 49

காரண காரண னுங்கலை சைக்கோன்
பேருணர் வோர்க்கருள் பிஞ்ஞக னென்பார்
ஓருணர் வின்றி யுயங்கு மெனக்கும்
ஆரருள் செய்திடு மற்புத மென்னே. 50

## வேறு

அற்புதக் கலைசை மேவு மங்கண னளக்கொணாத
பற்பலவிளையாட்டெல்லாம் பரித்திடும்பான்மைநோக்கின்
முற்பவக் கடலின் மூழ்கி முடிவின்றி யுழலு மிந்தச்
சிற்றுயிர்களின்மேல் வைத்தகருணையாய்ச் சிறக்குமன்றே.

அன்றுதொட்டின்று காறு மருமறை நான்குந் தேடி
நின்றலைந் தோல மிட்டுங் காணொணு நிமல மூர்த்தி
இன்றமிழ்க் கலைசை வாண னியல்பினை யிரண்டு நாளிற்
பொன்றிடு மனிதர் தேறி யெங்ஙனம் போற்று வாரே. 52

போற்றிலேன் பூதி மெய்யிற் புனைந்திலே னெழுந்தோ
[ரைந்துஞ்
சாற்றிலே னக்க மாலை தரிக்கிலே னடியா ரேவல்
ஆற்றிலேன் கலைசை வாழு மண்ணலே தறுகண் வெள்ளை
யேற்றனே யெளியே னந்தோ வெங்ஙன முய்யுமாறே. 53

மாறிலாக் கருணை மேரு மலைபமுத் தனைய மெய்யும்
ஆறணி சடையுங் காள கண்டமு மழகு பூத்த
நீறணி மார்பு முள்ளே நிலவிய நகையு மம்மை
கூறுமாய்க் கலைசைவாண னெனதகங் குடிகொண்டானே.

கொண்டனை யென்னை யுன்னைக் கொடுத்தனை
[மலநோய் நீங்கக்
கண்டனை வினைக ளெல்லாங் கழித்தனை யுடலின் பாரம்
விண்டனை பரமா னந்தம் விளைத்தனை கலைசை வாழும்
அண்டனே யுண்டு கொல்லோ வடியனேன் செயுங்கைம்
[மாறே. 55

மாறினேன் சமய பேத வழிப்படு புன்மை யெல்லாந்
தேறினேன் வீடு சேர்க்குஞ் சைவசித் தாந்த மென்றே
யேறினேன் சிவலோ கத்தே யிரண்டறக் கலந்தொன்றாகி
யாறினேன் வருத்த மெல்லாங் கலைசைக்கோ வருளினாலே.

அருள்வழி நடந்து பாச மறுக்குமா றுணர மாட்டீர்
மருள்வழி நடந்து மேன்மேல் வல்வினை யீட்ட வல்லீர்
தெருள்வழி கேட்பீ ராகிற் சிவபிரான் கலைசை வாழ்வை
யொருமுறை யிறைஞ்சீரென்று மின்பத்தே னுண்ண
[லாமே. 57

உண்ணிறை யமுதே யென்று முயிரினுக் குயிரே யென்றும்
பண்ணினல் லிசையே யென்றும் பழத்திடைச் சுவையே
[யென்றுங்
கண்ணினுண் மணியே யென்றுங் கலைசைவாழ் சிவமே
[யென்று
மெண்ணிநெஞ் சுருகி யேத்தப் பெற்றவா றெளியனேனே.

எளியனே னறிவி லாத வேழையேன் மடவா ராசைக்
களியனே னுடலே யோம்புங் கடையனே னுலக வாழ்விற்

குளியனே னெனையு மாவா குலப்புகழ்க் கலைசைக் கோமா
னளியனே னாகக் கைக்கொண் டாண்டவா றென்னே
[யென்னே. 59

என்னையு முனையுங் காட்டா தென்னுளேயன் றுதொட்டுத்
துன்னிய மலவீ ரத்தின் றொடக்கறுத் தறிவு காட்டிப்
பன்னருந் துரியா தீதப் பராபர நிலையிற் சேர்த்தா
யந்நிலை பிறழா வண்ண மளித்தருள் கலைசை வாழ்வே. 60

## வேறு

வேயொன்று தோளி மலையான் மடந்தை
விரிநீ ருடுத்த வுலகந்
தாயென் றிறைஞ்சு சிவகாமி யம்மை
யொருபான் மணந்த தலைவன்
வாயொன்று மன்பி னடியார்கள் வாழ்த்து
கலைசைப் பெரும்ப தியில்வாழ்
தீயொன்று கைய னடியே யலாது
தெருளாது சிந்தை பிறிதே. 61

பிறப்போ டிறப்பி லிதுகாறு நைந்து
பிறிதொன்று சார்பு கிடையா
துறுப்பான் மயங்கி மடவார் வலைக்கு
ளுழிதந் தலைந்த சிறியேன்
புறச்சார்பு மற்றை யகச்சார்பு நீத்து
னருளைப் பொருந்த வருளா
யிறப்பார்க ளென்பு தலைமாலை சூடி
கலைசைப் பதிக்கு ளிறையே. 62

இறையென்று நம்பி வழிபாடு செய்யி
னிறவாத வின்ப மருவக்
குறைவின்றி நின்ற வடியார் குழாங்க
ளொடுகூடி வாழ வருளும்

மறையொன்று நாவன் முதலோர்கள் வாழ்வை
மதியாத வீர முதவும்
பொறைகொண்ட சிந்தை யவர்கோ விருந்த
புரமேவு மாதி முதலே. 63

முதலென்ப தின்றி நடுவென்ப தின்றி
முடிவென்ப தின்றி முழுதா
யதுவென்ப தின்றி யவனென்ப தின்றி
யவளென்ப தின்றி யவையா
யிதுவென் றெவர்க்கு மறியப் படாத
வியல்பாகி யுள்ள பொருளா
மதிதங்கு சோலை செறிகோ விருந்த
புரமன்னு மெங்கள் சிவனே. 64

சிவந்தாரு மாவர் கரியாரு மாவர்
வெளியாரு மாவர் செழும்பொன்
னுவந்தாரு மாவர் பசியாரு மாவ
ரொளிவண்ண ராவர் தழலாய்
நிவந்தே விரிஞ்சர் முகில்வண்ணர் தங்க
ணினைவிற்கு மெட்ட வரியார்
அவந்தா னிலாத கலைசைப் பதிக்க
ணமர்ந்தாரு மாவ ரவரே. 65

அவமே விளைத்து முழுமூட னாகி
யறிவென்ப தின்றி யழிவாய்ப்
பவமே விளைக்கு முடலோம்பி யென்று
நரகிற் படிந்து துளைவேன்
சிவமே விளைக்கு மடியார் குழாங்க
ளொடுசேரு நாளு முளதோ
தவமே விளைக்கு முயர்கோ விருந்த
புரமன்னு சைவ முதலே. 66

சைவத்தில் வந்து சரியாதி மூன்று
தடையின்றி முற்று பருவ
மைவத்த தீய மலபாக நோக்கி
வினையொப் புறுத்தி வழியான்
மெய்வைத்த ஞான குருவாகி வந்து
கதியுய்க்க வல்ல விமலன்
செய்தற் றுடுத்த கலைசைக்குண் மேவு
சிவனுக்கு மெய்ம்மை யிதுவே. 67

இதுவன்றி வேறு சமயத்தை நம்பி
னிலைமுத்தி யுண்மை யெனவே
மதமாறு தோறு மதிமாறு கொண்டு
பலவாத மோதி மருள்வேன்
அதுதீர வாய்மை யிதுவென்று காட்டி
யருள்செய்த செய்கை யெளிதோ
பொதுவாட் டுகந்து வளர்கோ
விருந்த புரமன்னு ஞான மணியே. 68

மண்ணீர் விசும்பு கனல்கா லருக்கன்
மதியாவி யென்னு முறையா
லெண்ணீர்மை கொண்ட யிவையெட்டு மன்றி
யுலகென்ப தில்லை யிவையே
யண்ணு வுனக்கு வடிவாகு மென்னி
னவைதோ றுயிர்க்கு யிரதாங்
கண்ணன தெய்வ மெவர்வே றுளார்கள்
கலைசைப் பதிக் கிறைவனே. 69

வனந்தோ றலைந்து விரதங்கள் பூண்டு
சடைகட்டி வாட லுறினுந்
தனஞ்சேர்ந் துயர்ந்த குலத்திற் பிறந்து
சதுர்வேத மோதி வரினுந்

தினஞ்சாத் திரங்கள் பலகற்று வாது
செயவல்ல ரேனு மெவனும்
அனந்தாதி யான கலைசைச்சி வன்ற
னருளைப் பெருது விடினே. 70

## வேறு

விடரொடு தூர்த்தர் பேதையர் கயவர்
வேழம்ப ரனையரோ டுறவாய்
நடையெலாங் கெடுத்தே யிழிதொழில் விரும்பு
நாயினே னுய்யுமா றுளதோ
மடலவிழ் கமல வாவிக டோறு
மாதரார் வளம்புனல் குடையுந்
தடநெடும் புரிசைக் கலைசைமா நகர்வாழ்
தற்பரா சிதம்பரே சுரனே. 71

சுரிகுழன் மடவா ரிளமுலைப் பணைப்புந்
துகிலிறை சோர்வது நகையும்
வரிவிழித் தொழிலுஞ் சேயிதழ்த் துடிப்பு
மனத்திடை யெழுநிவைத் தழிவேன்
தெரிதமிழ்க் கலைசைச் சிவபிரான் வடிவுஞ்
செய்கையுந் தன்னடி யார்க்குப்
பரிவுகூ ரருளு மனத்தகத் தெழுதாப்
பாவியேற் கினிப்புக லென்னே. 72

என்பினை நரம்பாற் கட்டிமேற் றேல்போர்த்
திறைச்சியு மூளையு மடைத்த
வன்புழுக் குரம்பை நாற்றமென் ஞது
மஞ்சளு மாடையு மணியு
முன்புற நோக்கி மாதரென் றெண்ணி
முயங்கிட முயலுதி நெஞ்சே
யன்புறுங் கலைசைச் சிதம்பரே சுரன்ரு
ளடைந்துளோர் மதிப்பரோ வுனையே. 73

உன்னுமுன் கடலு மலையும்வா னகமு
　　மோடுவை மீளுவை வறிதே
பன்னிடு மெல்லாங் கிடைத்ததாய் மதித்துப்
　　பாவனை செய்துதேக் கிடுவா
யென்னிதிற் பயனென் றோர்ந்திலாய் கலைசை
　　யீசனைப் பணிந்திலா யெளியேன்
றன்னையு முடன்கொண் டிழுத்திழுத் தலைத்தாய்
　　தக்கதோ மனக்கருங் குரங்கே. 74

மனக்கருங் குரங்கின் கைவசப் பட்டு
　　மயங்கினேன் பதைபதைத் துருகேன்
கனக்கறை மிடற்று யென்றழைத் தலறேன்
　　கலைசையைச் சேர்ந்திலே னடியா
ரினக்குழாத் தெய்திச் சிவநெறி யொழுகே
　　னென்செய்கே னேழையே னந்தோ
வுனக்கெவ னடுத்த தாவவென் றருளா
　　யுலந்துபோ னேன்சிவ முதலே. 75

சிவனெனு மொழியைக் கொடியசண் டாளன்
　　செப்பிடி னவனுட னுறைக
வவனொடு கலந்து பேசுக வவனோ
　　டருகிருந் துண்ணுக வென்னு
முவமையில் சுருதிப் பொருடனை நம்பா
　　வூமரோ டுடன்பயில் கொடியோ
னிவனெனக் கழித்தா லையனே கதிவே
　　றெனக்கிலை கலைசையாண் டகையே. 76

ஆண்டவன் றன்னை யடிமையென் றுரைப்பா
　　ரடிமையை யாண்டவ னென்பார்
மாண்டகு பதியைப் பசுவென்றும் பசுவைப்
　　பதியென்று மதித்துனை யிகழ்ந்தே

தாண்டரு நிரயக் கிடங்கினில் வீழுஞ்
சழக்கரோ டிணங்குரு வரமே
வேண்டினே னருளாய் கலைசைமா நகரின்
மேவிவாழ்ந் தருள்பசு பதியே. 77

பதியுமோ கத்தான் மானத்தான் மருளாற்
பற்றிய சார்பிளு லுன்னைத்
துதிசெயா திகழ்வோ ரிகழுக கலைசைச்
சுந்தரா சிதம்பரே சுரனே
மதிபொதி சடையா யாங்களெல் லோமும்
வழிவழி யுன்னடித் தொழும்பே
நிதியென வுடையே மென்னுமிக் கருத்தே
நிலைபெறச் செய்துகாத் தருளே. 78

அருண்மடை திறந்த நோக்கமும் வரதா
பயங்களு மம்புயக் கரமுந்
திருமுகப் பொலிவுங் குறுநகை யழகுஞ்
செஞ்சுடர் மகுடமு மரையின்
மருவுதோ லுடையுஞ் சேவடித் துணையு
மகிழ்சிவ காமிநா யகிசேர்
உருவுமாய்க் கலைசைச் சிதம்பரே சுரரென்
னுள்ளகங் கோயில்கொண் டனரே. 79

கொண்டல்போன் முழங்கிக் கூற்றுவ னெதிரே
குறுகிட நாடியுந் தளரக்
கண்டவ ரிரங்க வைம்பொறி கலங்கக்
கண்டமே லையெழுந் துந்தி
மண்டிட வறிவு கலங்குமந் நாளுன்
மலரடி வழுத்திட மாட்டேன்
அண்டர்சூழ் கலைசைப் பராபர வின்றே
யடைக்கலங் கண்டுகொண் டருளே. 80

## வேறு

அருவின னுருவின னருவில னுருவிலன்
இருளின ரொளியின னிருளில ரொளியிலன்
மருவளர் கலைசையின் மகிழ்பவ னிகபரம்
இருமையு மெழுமையு மெனையுடை யவனே. 81

அவனவ ளதுவெனு மவைதொறும் விரவினை
இவனவ னெனவுணர் வரியதொ ரியல்பினை
தவமலி கலைசையின் மருவிய தகுதியை
சிவனெனு மொழியினை யிவையுன செயலே. 82

செயலெலவ ரறிபவர் திருவளர் கலைசையின்
மயிலிய லுமையொடு மகிழுவை மதனுடல்
இயலற வெரிசெய்து முனியென வடநிழல்
அயலினு மமர்குவை யதிசய மரனே. 83

அரகர கரவென வலறிடு புலவரொ
டரியயன் வெருவுற வருவிட மமுதுசெய்
தரிலறு மமரரென் றொருபெய ரமைவுற
வருள்பவர் கலைசையி லரனல திலையே. 84

இலவிதழ் மடநடை யுமையொடு மிரசத
மலைமிசை யமர்பவர் மகிழ்தரு மிடமா
நிலைபெற வளமையு நிதிகளு மளவறி
கலைகளு நிறைவுறு கலைசைநன் னகரே. 85

நகவலர் திரிபுர நலிவுற வழலென
மிகவல ரரியயன் வெருவுற வுளமது
புகவலர் மதனுடல் பொடிபட விழியெரி
யுகவலர் கலைசையி னுறையிறை யவரே. 86

இறையவ னிறையினி லியமனை யுதைசெய்த
நிறையவ னிறையுறு கலைசையி னிலவிய

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்:


மறையவன் மறைவற வளரடி யவரக
வறையவ னறைபுன லவிர்சடை யவனே. 87
நூல் வரிசை எண்:

சடைமுடி யரவணி தலைகலன் வனமிட
முடையுரி கழுதின முணவது பலியெனு
மடைவினர் கலைசையி னடிகளை யவனியி
னிடையிறை யெனவழி படுபவ ரெவரே. 88

எவனுல குயிர்தொறு மிசைவுற மருவினன்
எவனவ ரவர்தமை வினைவழி யிருவினன்
எவனெனை யுடையவ னிணையறு பரசிவன்
எவனவ னுயர்கலை சையில்வரு மிறையே. 89

இறவொடு பிறவியி னிழிதரு மெளியன்
நிறைசுக வடிவினி னிலைபெற வருளினன்
அறிவொடு வழிபடு மடியவர் குழுமிய
செறிவுறு கலைசையில் வருபர சிவனே. 90

## வேறு

சிவந்த மேனியாய் போற்றி நாயினேன்
செய்தி டும்பெரும் பிழைபொ றுத்துவான்
சிவந்த ரும்பெரும் கருணை போற்றிசுற்
சிலைவ ளைத்துமுப் புரங்க ளெரிறமச்
சிவந்த வாளியாய் போற்றி காலனைச்
சிதைத்து ருட்டியன் ஞேல மென்னவஞ்
சிவந்த பாலனைக் காத்த ளித்திடுஞ்
செல்வ போற்றிதென் கலைசை வாணனே. 91

வாண ளுர்மனச் செருக்கு மாறிட
மறுவில் கண்ணனை யேவல் கொண்டுபின்
நாணு ருதவர்க் குனது கோயிலி
னடன காலையிற் குடமு ழக்கிடக்

தமிழியல்துறை.

கோண மால்வரங் கொடுத்த ளித்திடுங்
குழக போற்றிதென் கலைசை மேவிவாழ்
நீணி லாப்பிறைச் சடில மாமுடி
நிமல போற்றிமற் றெங்கண் மன்னனே. 92

எங்கு நோக்கினு மங்கெ லாமெனக்
கிருண்ட கண்டமு நான்கு தோள்களுங்
கங்கை வேணியு முக்க ணுஞ்சிவ
காமி பாகமுங் கமல பாதமுஞ்
செங்கை மான்மழுப் படையு நீற்றொளி
சிறந்த மார்பமுங் காண வெய்திநின்
றங்க ணச்சநீத் தருள்சு ரந்திடுங்
கலைசை வாணநின் னடிகள் போற்றியே. 93

போற்றி போற்றியென் றமரர் மாதவர்
புவியு ளோர்திரண் டிசைமு ழக்கிட
நீற்றொ ளிச்சிவ நேசர் வாழ்த்தவின்
னியங்க ளார்ப்பெழத் தெரிவை மாரிளங்
காற்றி னெல்குபூங் கொடியி னுடிடக்
கலைசை வீதியிற் கௌரி யோடுநீ
யேற்றின் மேல்வருஞ் சேவை தந்தெனை
யாண்டு கொண்டவா போற்றி யெந்தையே. 94

எந்தை நீயெமக் கன்னை நீயெமக்
கிறைவ னீயெமை யாண்ட நாயனீ
சிந்தை நீசெயுஞ் செயலு நீபெறுஞ்
செல்வ நீதொழுந் தெய்வ நீகற்கும்
விந்தை நீயெய்ப்பில் வைப்பு நீநசை
வெறுப்பு நீயலால் வேறு கண்டிலேங்
கந்த வார்பொழிற் கலைசை வாழ்சிவ
காமி பாகநின் கருணை போற்றியே. 95

கருணை யாளனே போற்றி தென்பெருங்
கலைசை யாளனே போற்றி நின்னலால்
உரிமை வேறிலேன் போற்றி பாசநோ
யொழியு மாறுசெய் போற்றி யாட்கொளக்
குருவு மாயினாய் போற்றி வீட்டினைக்
கூடவேண்டினேன் போற்றி ஞாலமேற்
பருவ ராதருள் போற்றி யிவ்வுடற்
பார மாற்றிலேன் போற்றி யையனே. 96

ஐய னேயடி போற்றி பேரரு
ளாள னேயடி போற்றி யன்பர்பான்
மெய்ய னேயடி போற்றி தில்லைவாழ்
வித்த காவடி போற்றி பொய்யர்தம்
பொய்ய னேயடி போற்றி யீறிலாப்
புராண னேயடி போற்றி மான்மழுக்
கைய னேயடி போற்றி தென்பெருங்
கலைசை யாயடி போற்றி போற்றியே. 97

போற்றி போற்றிபே ரின்ப ஞானமாப்
புணரி யாய்நிறைந் தெங்கு மாயினாய்
போற்றி போற்றியோர் மறுவி லாப்பெரும்
புகழ் படைத்தவா நந்த வெள்ளமே
போற்றி போற்றிமெய் யன்பர் சிந்தையிற்
பொங்கி யூறுதீஞ் சுவைக்க ரும்பனே
போற்றி போற்றிதென் கலைசை வைப்பனே
பொறுக்கி லேனினி மாய வாழ்க்கையே. 98

மாய னைக்கணை யாக வேவினை
மாய னைவிடை யாக வூர்ந்தனை
மாய னைத்திரு மனைவி யாக்கிமுன்
மணந்து சாத்தனைத் தந்த ளித்தனை

மாய னுக்கொரு பாக மீந்தனை
மாய னுள்ளமே கோயில் கொண்டனை
மாய னேத்திர மலர்ந்த தாளினாய்
வரத போற்றிதென் கலைசை யீசனே. 99

ஈச னே திருக் கலைசை மேவிவா
ழிறைவ னேசிவ காம நாயகி
நேச னேயருட் சிதம்ப ரேசனே
நித்த நெக்குநெக் குருகி யேத்துவோர்
பாச வேர றப் பறிக்கு நின்னிரு
பாத பங்கயம் போற்றி பொய்யெலாம்
வீசி மேலைவீட் டின்ப நல்குவாய்
மெல்ல மெல்லவந் தெனைத்தி ருத்தியே. 100

கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் மலரடி வாழ்க.

ஸ்ரீ மெய்கண்டதேவர் மிளிர்கழல் வெல்க.

# குறிப்புரை முதலியன.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி.

## குறிப்புரை.

---

### காப்பு

பரு மாலை நிரை வீதி — பெரிய மாலைகள்வரிசையாகத் தொங்க விடப்பெற்றுள்ள வீதி: மலர்மாலைகளும் மணிமாலைகளும் என்க அந்தாதித் திரு மாலை —அந்தாதியாகிய அழகிய மாலை. பொரு மாலை — போருக்குரியவெற்றி மாலை: அது வாகைப் பூமாலை. கயமுகவன் — யானைமுகத்தையுடைய அசுரன்: அவன் கய முகாசுரன். கரு மாலை — பிறவி மயக்கத்தை: மால் — மயக்கம். துரந்து அருள — போக்கி அருள் செய்ய. களபம் — யானை. இத்தல விநாயகர் செங்கழுநீர் விநாயகர் ஆவர்.

### நூல்

1. அரு மால் உற — போக்குதற்கரிய மயக்கம் அடையும்படி. அங்கணன் — சிவபெருமான். இரு மா மலம் — பெரிய கரிய ஆணவ மலம் 'வல்லாண்மை செலுத்தும் மலம்' (செ—4.) ஆணவ மலத்தை இருண் மலம் என்பர். ஆணவ மலத்துக்குப் பெருமையாவது— "என்னையு முனையுங் காட்டா தென்னுளே யன்று தொட்டுத். துன்னிய மலம்' (செ—60) அற்று — வலி கெட்டு பேணிய வாறு வியப்பு.

பூத இருளானது எல்லாப் பதார்த்தத்தையும் மறைத்துத் தன்னைக் காட்டி நிற்கும்; ஆணவ மலமானது தன்னையும் காட்டாது தனக்குள்ளே இருக்கிற ஆன்மாவையும் காட்டாது "ஒரு பொருளுங் காட்டா திருளுருவங் காட்டும்—இருபொருளுங் காட்டா திது." என்பது திருவருட் பயன். ஆன்மாக்கள் அநாதியே ஆணவ மலத்தால் கட்டுண்டு இடப்பன ஆம். அஞ்ஞான நிகழ்ச்சிக்குக் காரணமாய் நிற்பது

ஆணவமலம். செம்பிற் களிம்புபோல அநாதியே விரவிநிற்பது. எண்ணிறந்த சத்திகளால் எண்ணிறந்த உயிர்களினும் சேர்ந்து விரவிநின்று அறியாமையை விளைவிப்பது இது என்க.

இனி, நெல்லின்கண் உளதாகிய முளைத்தற்சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறு போல, உயிரின்கண் சுக துக்கங்களை முதற்காரணமாய் நின்று தோற்றுவிப்பது கன்ம மலம். முளைத்தற்கு அனுகூலம் செய்து உடன் நிற்கும் தவிடுபோல அச்சுகதுக்கங்கள் ஆண்டுத் தோன்றுதற்குத் துணைக்காரணமாய்த் தன் காரியம் ஆகிய தனு கரணம் முதலியவற்றையும் உயிரையும் இயைவித்து நிற்பது மாயா மலம். அம்முளை ஆண்டுத்தோன்றுதற்கு நிமித்த காரணம் ஆகிய உமிபோல அத்தோற்றத்திற்கு நிமித்த காரணமாய் அவற்றை முறுகுவித்து நின்று அச்சுக துக்கங்களை உயிர் நுகருமாறு நிலைபெறுத்துதல் ஆணவமலம். கன்மமலம் போகம் பண்ணுதல், மாயாமலம் பந்தம் பண்ணுதல், ஆணவமலம் போத்திருத்துவம் பண்ணுதல் ஆம். கன்மத்துக்கு சுபாவம் மாயா காரியங்களாகிய உலகப் பொருள்களிலேயே சுவையை ஊட்டுவித்து விருப்பத்தை விளைவித்துக் கொண்டிருப்பதாம்.

2. ஒன்று — சிறிதும். உணரேனையும் — உணராத வனுகிய என்னையும்: வினையாலணையும் பெயர். 'உம்' இழிவு சிறப்பு. கதியன்—வீட்டின்பமாக உள்ளவன். விமலன்—குற்றமில்லாதவன். மெய்யன் — உண்மை வடிவானவன். விடை— இடபம். என் ஐயன் — உயிர்த்தலைவன்: பசுபதி. வலித்து— வலியவந்து. அற்புதம் — ஆச்சரியமாம். வலித்து ஆளுதல் மார்ச்சால நியாயம். கதியன் — வீடுபேருக உள்ளவன்.

3. புதியான் பழையான் — புதுமைக்குப் புதுமையானவன், பழமைக்குப் பழமையானவன். "முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே—பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என்பது திருவாசகம். முதலான் —முதலாகவுள்ளவன் பகவன் — சிவபெருமான். ஐசுவரியம் வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறும் பகம் எனப்படுதலின், இவை சிவபிரானுக்கே உண்மையின்,

அவரே பகவன் எனப்படுவர். அற்றேல், இவை ஆறும் சிவ பிரானுக்கு உள்ளன என்பதற்குப் பிரமாணம் என்னை எனின் :— அவருக்கு ஐசுவரியம் உண்மைக்கு ஈசுர பதச் சுருதியும், வீரியம் உண்மைக்கு உக்கிர பதச் சுருதியும், புகழ் உண்மைக்கு சிவ பதச் சுருதியும், திரு உண்மைக்கு இருக்கு வேதமும், ஞானம் உண்மைக்கு சருவஞ்ஞ சுருதியும். வைராக்கியம் உண்மைக்குக் காமரிபு பதச் சுருதியும் பிரமாணமாம் என்க. "திருவினுற் சிரேட்டர்" என்றும், "திருவை எய்தும் பெருட்டுச் சிவபிரானது விசித்திர ரூபமாகிய லிங்கம் தேவராற் பூசிக்கப்பட்டது" என்றும் இருக்கு வேதம் கூறலின் ஈண்டுத்திரு எனப்பட்டது பொருட்டிரு அன்று என்க. இதனைக் கீழ் வரும் மந்திரங்களால் அறிக." "ச்ரேஷ்டோ ஜாதஸ்ய ருத்ர ச்ரியாவரி தவஸ் தமஸ் தவஸாம் வஜ்ர பாஹோ '(ருக்வேதம் 2—33—3)" தவ ச்ரியே மருதோ மர்ஜயந்த ருத்ர யத்தேஜநிம சாரு சித்ரம்! பதம்யத் விஷ்ணோ ருபமம் நிதாயி தேந பாஸி குஹ்யம் நாம கோநாம்' (ருக் வேதம் 5—3—3) என்பன காண்க.

வாய்மை — பொறை — தைரியம்—அதிட்டித்தல் — ஆன்ம பேதம் — சிருட்டித்தல் — ஆசையின்மை — தவம் — புத்தி — ஈசுரத்துவம் என்னும் தச குணங்களும் தருமமும் சிவபிரானுக்கே இயைவன. இனி, ஐசுவரிய முடையார், பெரும்புகழுடையார், வீரர், செல்வர், அரசர், சக்கிரவர்த்திகள் என்னும் இவரையும் இன்னோரன்ன இயல்புடைய பிறரையும் பகவப் பெயரால் வழங்கார். மெய் உணர்ந்து அவா அறுத்தார்கண் சிவம் பிரகாசித்தல் உண்மையின் அவரைப் பகவப்பெயரான் வழங்குப இதனை, சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் நோக்கி அறிக. மதியால் — ஆன்ம அறிவால். சிவஞானம் ஒன்றால் மட்டுமே தேறத்தகும் என்றபடி "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்னும் திருவாசகம் காண்க. புறத்தான் அகத்தான் — புறத்தும் அகத்தும் உள்ளவன். எள்ளில் எண்ணெயைப் போல எங்கும் நிறைந்தும் எல்லாவற்றையும் வியாப்பியமாகக் கொண்டிருப்பவன். வியாப்பியம் — ஒன்றினுன்று அடங்கி நின்ற நிறைவு என்க.

4. வல்லாண்மை—வலிய ஆண்மைக்குணம். மலம் ஈண்டு ஆணவம். பொறிகெட்டு — அறிவு கெட்டு.

5. மனமே! சிவனே இறை யென்று தேருய், சிவலோகம் ஏருய், இடும்பை யெல்லாம் பாருய், பதம் அஞ்சும் விதிப் படியே கூருய், அருளே குறியாய் எனக்கூட்டுக இடும்பை— துன்பம். பாருய் — அழிப்பாயாக. பதம் அஞ்சு — திருவைந் தெழுத்து. 'விதியெண்ணும் அஞ்செழுத்தே" என்பது சிவஞானபோதம். இதன் விரிவைச் சிவஞான பாடியத்திற் காண்க.

6. மனை — இல்லாள். கடும்பு — சுற்றம். தனைஒப்புறு மாயை — தனக்குத்தானே ஒப்பாகிய மாயை. 'மாயை மயக் கமும் செய்யும்' என்றபடி. மாயை விலாசம் — மாயையின் கூத்து. இனி, ஆன்மா முன்னே செய்யப்பட்ட புண்ணிய பாவங்களுக்கு ஈடாக உடம்பினையும், தத்துவங்களையும், இருப்பிடங்களையும் புசிப்புக்களையும் முதல்வன் மாயை யினின்றும் காரியப்படுத்தித் தர அம்மாயையின் வியாபகத் தால் தான் வியாப்பியமாய் அடங்கிக் கிடக்கும். இவ்வாறு மாயை தனக்குத் தனு கரண புவன போகமாய் இருத்தற்குக் காரணம் பிராரத்துவமே ஆம். அது முற்பிறப்புக்களில் ஆகாமியமாக ஏறியது. இம் மாயை நித்தியம். ஆயினும், காரியரூபத்தில் அநித்தியமாகக் காணப்படுகிறது. பொய்யை மெய்யாக்கிக் காட்டுதல் மாயையின் தொழில்.

7. இறை — சிறுபொழுது. பொறை — சுமை. நின் மலன் — மலமில்லாதவன். உடம்பும் மிக்க சுமை என்பது
"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்ருர்க் குடம்பு மிகை." திருக்குறள் — 345.

8. "ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்
டன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே."

என்பது சிவஞானபோதம் 8-ஆம் சூத்திரம்.

"புள்ளுவ ரைவர் கள்வர் புனத்திடைப் புகுந்துநின்று— துள்ளுவர் சூறை கொள்வர் தூநெறி விளைய வொட்டார்" எனவும், "வஞ்சக் கள்வர் ஐவரையும் என் மேற்றர வறுத்தாய்" எனவும் திருநாவுக்கரசு நாயனூர் அருளியமை காண்க. "பொறியாகிய ஐம்புல வேடர்களால்— பிறியா இடர் மூழ்குபு பேதுறுவேன்" என சிவஞானசுவாமிகளும் பிறிதோரிடத்தில் அருளிச் செய்தனர். ஒல்கும்—துவளும், வாடும். அல்கும்படி—தங்குமாறு.

10. சரணம்—அடைக்கலம். அரணம்—அம் சாரியை. கரளம்—நஞ்சு: ஆலகாலவிடம்.

11. வாரிதி—கடல். அருவுருவங்கடந்து—அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று நிலைகளையும் கடந்து என்க. இரவு பகல்—சகல கேவலம். இவ்வாழ்வு—சுத்தநிலை. இடையருத அன்போடு சிவத்தைப் பொருந்தி அதீதத்தை யடையும் இச்சையுடையோர் சுத்தாவத்தை நிலையேயாய் நிற்பர்.

12. உத்தி—படப்பொறி. ஒள் இழையார்—ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்த பெண்கள். அல்குல் இடக்கரடக்கல்.

14. கடைபோக—முழுவதும். கிடையாத பெருவாழ்வு—கிடைத்தற்கரிய பெருஞ்செல்வம். அதுஎளிதாகக் கிடைத்திருந்தும் அதனைப் பயன்படுத்திக்கொள்ளாமல் என்றபடி: நாய் பெற்ற தெங்கம்பழம் போல என்க.

15. பரந்து எழும்—வியாபகமாகவுள்ள. நிரந்தரமாய்-எப்பொழுதும். புரந்தரன்—இந்திரன். அரந்தை—துன்பம்.

16. "என்று நீ அன்று நான் உன்னடிமை அல்லவோ" என்ற தாயுமானவ அடிகள் வாக்குக் காண்க. முதல்வன் ஆன்மாக்களை அநாதியே அடிமையாக வுடையவர் என்க. ஆண்டான் அடிமைத்திறமே பேணவேண்டும். எல்லாம் உடைய நாயகன் இறைவனே ஆகலின். அடியேன் எவ்வளவு பொல்லாதவனுயினும் வெறுத்தலாகாது என வேண்டுகிருர்.

17. தொல்லைவினை — பழமையாகிய வினை; பிராரத்துவ கன்மம். தொடக்கு — சங்கிலி; பிணிப்பு.

18. பழங்கண் — துன்பம். வெகுண்டு — கோபித்து. பகடு — எருமைக்கிடா. படை — சூலப்படை, காலபாசம் முதலியன. தழங்கு—ஆரவாரம் செய்கின்ற. மூரி விடை — வலிய இடபம். அழுங்கேல் — வருந்தாதே. இயமன் என் மேல் தொடரும் முன்பே எழுந்தருளி இடபவாகனக் காட்சி அளித்து ஆட்கொள்ளவேண்டும் என வேண்டுவது இச்செய்யுளில் கூறப்படுகிறது.

19. பதிகள் — சிவதலங்கள். மூவர்—திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர், திருநாவுக்கரசு நாயனுர், சுந்தரமூர்த்தி நாயனுர் என்னும் சமயாசாரியர் மூவர். இவர் மூவர் முதலிகள் எனவும் வழங்கப்படுவர். தமிழ் மாலைப்பதிகம்-தேவாரத் திருப்பதிகங்கள் இதனைக் கீழ்வரும் செய்யுட்களால் அறிக. அவை வருமாறு :—

## வெண்பா

“ காழியினிற் சம்பந்தர்க் கன்புடனே காளகண்டர்
ஏழை திருமுலைப்பா லீயவே — ஆழியென
ஞான மிகுபதினு ருயிரமா நற்பதிகந்
தானருளிச் செய்தார் தமிழ்.” (1)

“ பண்ணுளநாற் பத்தொன் பதினு யிரம்பதிகம்
அண்ணல்திரு நாவுக் கரசுதமிழ் — விண்ணவரும்
எண்ணுமா ரூரர்முப்பத் தேழா யிரமென்ன
மண்ணின்மேற் செய்தார் மனு.” (2)

“ ஆகநூ ருயிரத்தீ ராயிரமு மம்பலவர்
பாகப் பு......க்குட் பண்ணியே — ஏகியபின்
ஏசிலா வித்தமிழை யேதெரிய வெண்ணியுய
ராசிலாச் சென்னியிரா சன்.” (3)

“ நம்பியாண் டார்தந்த நம்பியினு ஞரையூர்த்
தும்பிமுக னைத்தொழுது சோதியா — அம்பலவர்
தன்னருளால் வன்மீகந் தானருந்தி நின்றதொகை
தன்னைமுறை யேழுசெய்தார் தான்.” (4)

“ முந்து தமிழ்விரகர் முந்நூற்றெண் பத்துமூன்
றந்த முளமுறைமூன் றாகவே—சிந்தைதெளி
யப்பர்முந்நூற் றீரா றதின்முறைமூன் றாரரொன்
றெப்பினூற் றென்றென் றுணர்.” (5)

“ ஆகத் திருக்கடையாப் பெண்ணூறு மம்பலவர்
பாகத்துக் கொத்த பதிகமா — மோகத்திற்
கற்போருங் கேட்போருங் கண்ணுதலோன் றன்பதத்தி
லெப்போதும் வாழ்வா ரிவர்.” (6,

“ எண்ணு யிரத்திரு நூற்றைம்பத் தொன்று [முயர்]
அண்ணு மலையார்த மாகமாம் — பண்ணூல்
பாடுவார் கேட்பார் பரம சிவனடிக்கே
கூடுவார் குற்றமில ரே.” (7)

“ கண்ணுதலோன் வாழுங் கயிலைப் பதியுடனே
யெண்ணியிரு நூற்றெழுபத் திரிரண்டு–மண்ணின்மேல்
தேமாலை வார்குழலாய் தெய்வத் தமிழ்மூவர்
பாமாலை ஏற்ற பதி.” (8)

“ ஈழ்நாட் டிரண்டு மலைநாட்டி லொன்றுகொங் கேழுவைகை
வாழ்நாட்டி லீரே ழுமகதை யைந்து வடக்கிலைந்து
சோணுட் டினினூற்றுத் தொண்ணூற்று மூன்று துளுவி
[லொன்று
நாநாட் டியதொண்டை நன்னுட்டி லாறைந்து நன்னகரே.

“ தோடுடைய செவியன்முதற் கல்லூரீ ருகச்
சொற்பதினு ருயிரநங் தோணிபுரத் தரசு
நாடுடைய கூற்ருதி யெண்ணுகே னந்தம்
நாற்பத்தொன் பதினு யிரநாவுக் கரசு

மூடுடைய பித்தாவென் றடிநொடித்தா னீருய்
முப்பத்தே ழாயிரமா மொழிநாவ லூரர்
ஏடுடைய பதிகமிலக் கத்திரா யிரமு
மியம்பியருள் பெற்றிறைவ னடிசேர்ந்தா ரிவரே.

திருச்சிற்றம்பலம்.

இப்பாடல்களை இயற்றினர் யாவர் எனத் தெரியவில்லை.

பதிகர் — தூயோர்: அடியார்கள் எனினுமாம். இமையவர் — தேவர்.

20. யான், எனது என்பன அகப்பற்று புறப்பற்றுக்கள். தான் என்னும் அகங்காரம் பிரதிபுருஷநியதமாய் குல தன வித்தையாதிகளினாலே எனக்குச் சமானமாவார் யாவர் என்றும், நான் என்றும், என்னது என்றும் அபிமானத்தைப் பண்ணிக்கொண்டு மோட்சபரியந்தம் ஆன்மாவை நீங்காதே நிற்பதாம். அகங்கார மமகாரங்களில் கட்டுப்பட்டிருக்குமளவும் ஏகதேச அறிவே அன்றி வியாபகஅறிவு விளங்காதென்க.

"யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்" திருக்குறள்–346

ஊன் ஒன்றி — ஊனுடம்பைப் பொருந்தி. "வினைப்போகமே யுறுந் தேகங் கண்டாய் வினைதா னொழிந்தால், தினைப் போதளவும் நில்லாது" என்பர் பட்டினத்துப் பிள்ளையார். வினையினால் உடல் உண்டாம். அவ்வுடல் எண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதம் உடையன. ஒவ்வொரு பேதத்தினும் எண்ணிறந்த உடல் தோன்றுவன ஆம். செய்வினைகள் எண்ணில ஆதலின், உடல்களும் எண்ணிலவாம். "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச். செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள், எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்பது திருவாசகம்.

" பொத்தார் குரம்பை புகுந்தைவர் நாளும் புகலழிப்ப
மத்தார் தயிர்போல் மறுகுமென் சிந்தை"

" ஆயமாய காயந்தன்னுள் ஐவர்நின்று ஒன்றலொட்டார்
மாயமே என்றஞ்சுகின்றேன்."

" உன்னுருவிற் சுவையொளியூ றோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகும் ஐவீர் நுங்கள்
மன்னுருவத் தியற்கைகளால் வைப்பீர்க் கையோ
வையகமே போதாதே."

என்னும் தேவாரத் திருப்பாட்டுக்கள் பஞ்சேந்திரியச் சேட்டையை நன்கு தெளிவிப்பனவாம். "மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்து" என்பது மணிவாசகம்.

21. அடியார்கள் சிந்தையே கோயிலாக் கொண்டுறைபவர் இறைவன் என்பதும், அவர்கள் சிந்தை இத்தகையது என்பதும் இச்செய்யுளிற் கூறப்படுகிறது.

" கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட் டருத்தியோ
டுள்ளமொன்றி யுள்குவார் உளத்துளான்" தேவாரம்.

22 கதம்—கோபம். சந்ததம்—எப்பொழுதும். அண்டவாணர்—தேவர்கள். சரிப்பர்—நடப்பர். பாதபங்கயங்கள்—திருவடித் தாமரைமலர்கள். கடிந்தவர் — கோபித்தவர். காமன் — மன்மதன்.

23 மண்டி — நிறைந்து. தண்டலை — சோலை.

24. செல்வம், புகழ், சித்திகள், கல்வி இவற்றால் யாதொரு பயனுமில்லை. கலைசை நாயகனாகிய சிவபிரானுடைய அடியவர் திருநாமத்தைச் சொல்லி ஏத்தி அவருக்கு ஏவல் செய்யும் தொண்டர்களே பயன் பெறுவர். அடியார்க்கடியார் பெறும் சிறப்பே மேலானது. தொழும்பர்—அடியார்.

25. அல்லும் எல்லும் — பகலும் இரவும். சிவபிரானுடைய அடியவர் வேண்டினால் ஐம்பெரும் பூதங்களையும் மாற்றவல்லவர்; திருமால் பிரமன் பதங்களும் அவர்கட்குத் துரும்பு போல்வதாம் என்றபடி.

"விரும்பும் பெரும்புலியூர் எம்பிரான் அருள்மேவில் ஒரு
துரும்பும் படைத்தழிக்கும் அகிலாண்டந் தொகுதியையே"

என்பது சிதம்பரச் செய்யுட்கோவை. அறிவில்லாத துரும்பும் இறைவன் அருள் மேவினுல் எல்லாம் செய்ய வல்லது: ஆயின் மக்களுடம்பெடுத்த அறிவுடைய தொண்டர்கள் என்ன செய்ய மாட்டார்? அவருக்கு எல்லாம் எளிதாக நடைபெறும் என்க.

26. இரத்தல் துன்பம் கொடிது அதனைத் தொலைத்தருள வேண்டும் என்கிறூர்கள். இரப்போர் நிலை நன்கு இங்கு கூறப்படுகிறது. "பல்லெலாந் தெரியக்காட்டி" என்ற பழம் பாடலை நினைவுக்குக்கொண்டுவருவது இது. அரந்தை, எவ்வம்– துன்பம்.

27. பாரி — வள்ளல்களில் ஒருவன். மாரி — மேகம், புறநானூற்றில் காண்க. "கொடுக்கிலா தானைப் பாரியே யென்று கூறினும் கொடுப்பாரில்லை" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்; திருப்புகலூர்ப்பதிகம் சிந்தித்து இருத்தத்தக்கது. அற்பரைப் பாடி ஆயுளைக் கழியாமல் இறைவனைப்பாடி இன்பம் பெறுமாறு உபதேசிக்கின்றது இச் செய்யுள். "சிந்தைகெட்டுச் சாணும் வளர்க்க அடியேன் படுந்துயரம் சற்றல்லவே" எனவும், "செல்வரைப் பின்சென்று சங்கடம் பேசித் தினந்தினமும், பல்லினைக்காட்டிப் பரிதவி யாமல்" எனவும் பட்டினத்தடிகள் கூறுவர். "மிடியிட்ட வாழ்க்கையால்" என்ற தாயுமானவர் பாடல் காண்க.

"நோக்க மருக்கும் விழிச்செல்வர் பாற்சென்று"
என்னும் திருப்புகலூரந்தாதிச் செய்யுள் சிந்திக்க.

28. அண்டரும் எய்த அருமையான பதத்தில் உய்க்கும் என்றபடி. அகர ஈறு தொகுத்தல்.

29. மையல் மானுடப்பிறவியின் துன்பம் இச்செய்யுளில் பேசப்படுகிறது.

30. ஆழி — சக்கரப்படை. மாயன் — திருமால். அம் புயத்தன் — பிரமதேவர். கடுக்கை — கொன்றைப்பூமாலை. அங்கி – அக்கினிதேவன். மா ஏழ் பரித்த தேரின் அண்ணல் – சூரியன். மாயையால் இவ்வாறு மருண்டு கூறுவர் என்க.

**31.** மாயோன் — விஷ்ணுமூர்த்தி. மறையவன் — பிரம தேவர். மால் விடை — திருமாலாகிய இடபம். மால் பெருமை எனினும் ஆம். ஞேயம் — காட்சிப் பொருள். ஞாதிரு — காண்பான். ஞானம் — காட்சி. வேயதோள் — பசு மூங்கிலை யொத்ததோள். பங்கு — பாதி. மிடறு — கண்டம்.

இச்செய்யுளில் பிரமதேவர் முதலியோரைச் சிவன் எனச் சொல்லுவதென்? எனில், படைத்தல் முதலிய தொழில்களைச் செய்யும் சிவசத்தி பிரமா முதலியோரிடத்துப்பதிய அவர்களும் அவன் ஆணையால் அவ்வத் தொழில்களை ஆற்றுதலின் அவர்களும் சிவன் எனவே படுவர். எதுபோல எனின்? ஆசாரியரை அந்தச் சிவனது சத்தி அதிட்டித்து நடத்த அவரைச் சிவனென்றே கருதுமாறு போலாம்.

இனி, பிரமன் மால் உருத்திரன் முதலியோர் முறையே படைப்பு காப்பு அழிப்பு ஆகிய முத்தொழில் இயற்றுவதனால் அவர் மூவரும் சமமாக உலகினுக்குக் காணப்படுகின்றனர். இவருள் முதல்வர் யாவர்? என்னும் வினா எழும் அன்றே! படைப்புத்தொழிலும் காப்புத்தொழிலும் அத் தொழிற்கு அதிபதிகளும் சங்கார காலத்தில் ஒழிந்து போகின்றமையால் அச்சங்காரத் தொழிலுக்குத் தலைவராகிய கடவுளே முதல்வர் என்க. பிரம விஷ்ணு உருத்திரர் மூவரும் சிவபெருமான் ஆணைவழி நிற்பவர். மூவரில் சங்காரருத்திரன் மேம்பட்டவர் என்பது சூதகீதை முதலியவற்றில் கூறப்பட்டது. பரமசிவனாகிய மகாருத்திரன் கூறாக உள்ளவர் சங்கார உருத்திரன். இச் சங்காரருத்திரன் பெயர் உருவம் செய்கை வேடம் என்பன சிவபிரானோடு ஒப்பவுடையன என்க. மூலம் — துரிய மூர்த்தியாகிய பரமசிவன். சங்கார ருத்திரனுக்கும் பரமசிவனுக்கும் வேறுபாடு அதர்வசிகை முதலியவற்றில் கூறப்பட்டது

**32.** தமோ குணம் கருமை, சத்துவத் தொழில் காத்தல். தமோகுணத்தொழில் சங்கரித்தல்: சத்துவத்துரு வெண்மை. இராசதத் துருப்பொன்மை. இராசதத் தொழில் — படைத்தல். அயன் — பிரமன். தமோமயம் — தாமதகுணம்.

தாணு—சங்கார உருத்திரன். "இனிச் சங்கார உருத்திரனும் சங்கரித்தற்றொழிலின் பொருட்டுத் தாமத குணத்தை மேற் கொண்டதல்லது இயல்பாக உடையன் அல்லன் என்க. தாமத குணத்தின் காரியமாகிய துயில் மயக்கம் வஞ்சனை முதலியன அவன்கண் இன்மையின். மாயோனுக்குச் சாத்துவிக குணம் கூறியது காத்தற் றொழின் மாத்திரைக்கே எனக் கொள்க. இன்னோரன்னவை எல்லாம் 'பிரம தருக்க ஸ்தவம்' என்னும் வடநூலுள் விரித்துக் காட்டிய வாற்றான் அறிக" என்பது சிவஞானபாடியம்.

34. முக்குணம்—சத்துவம் இராசதம் தாமதம் என்பன. மூவர் — அயன், அரி, உருத்திரன். முத்தொழில்—படைத்தல் காத்தல் அழித்தல் என்பன. குணாதீதன் என்றது மாயா குணங்களால் பற்றப் படாதவன் என்றபடி.

36. "அயனை முன்படைத் திடுமொரு கற்பத்
தரியை முன்படைத் திடுமொரு கற்பத்
துயருருத்திரன் தனைமுனம் படைப்ப
னொருகற்ப மற்றொரு கற்பந் தன்னில்
முயலு மூவரை யொருங்குடன் படைப்பன்
முற்பி றந்தவர் மற்றிரு வரையும்
செயலி னாற்படைக் கவுமருள் புரிவன்
சிவபி ரானெனி லேற்றமிங் கெவனோ"

எனச் சிவதத்துவ விவேகத்திற் கூறிய தனையும் ஈண்டு விரித்துரைத்துக் கொள்க என்பது சிவஞான பாடியம்.

37. வல்ல வானவர் — வல்லவர்கள் எனத் தம்மைத் தாமே மதித்திருந்த தேவர்கள்: இந்திரன், பிரமன், திருமால் முதலியோர். மறுக — அஞ்ச. ஒல்கி — சிதறி. வல்லை — வன்மையையுடைய மகாதேவர். இதனைக் கீழ்வரும் தேவா ரத்திருப் பாட்டுக்கள் தெளிவுறுத்தும்.

"தஞ்சமில்லாத் தேவர்வந்துன் தாளிணைக்கீழ்ப் பணிய
நஞ்சை யுண்டாய்க் கென்செய் கேனோ"

—திருஞானசம்ப: தேவா.

"அண்டவர்கள் கடல்கடைய அதனுள் தோன்றி
அதிர்ந்தெழுந்த ஆலாலம் வேலை ஞாலம்
எண்டிசையும் சுடுகின்ற வாற்றைக் கண்டு
இமைப்பளவில் உண்டிருண்ட கண்டர்"

திருநாவு: தேவா.

"பொருதிரைவாய் நஞ்சமுண்ட குறியிலங்கு மிடற்றானை"
"எண்ணு தமர ரிரக்கப் பரவையுள் நஞ்சையுண்டாய்"

—திருநாவு: தேவா.

"அலையடுத்த பெருங்கடல்நஞ் சமுதா வுண்டு
அமரர்கள்தம் தலைகாத்த ஐயர்" —திருநாவு: தேவா.

"கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
ஆலால முண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலால முண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ."

என்பது திருவாசகம்.

38. செங்கதிர் — சூரியன். சோமலோகம் — சந்திர மண்டலம். மனக்குகை — மனமாகிய குகை.

39. நேடியும் — தேடியும். வரம்பு — எல்லை. ஈனம் உற்று — கீழான தன்மையை அடைந்து. கான் உலாம் மலர் —மணம் பொருந்திய மலர். சிறியோன்—சில் வாழ்நாட் பல் பிணிச் சிற்றறிவினையுடையவனாகிய யான் என்க. இதனை,

"வேத புருடனும் யாதுநின் நிலையெனத்
தேறலன் பலவாக் கூறினன் என்ப
அளவா நின்னிலை யளத்தும் போலும்
அறிவும் ஆயுளும் குறையக் குறையாத
பையுள்நோய் எண்ணில படைத்துப்
பொய்யுடல் சுமக்கும் புன்மை யோமே"

என்னும் ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் திருவாக்கும் வலி யுறுத்தும்.

40. புரம்—திரிபுரம்: மும்மதில் என்க. மாரன் — மன்மதன். உகிர் — நகம். உழுவை — புலி. நின்ற யாவையும் நீங்கும் நாள் — சர்வ சங்காரகாலத்திலே. ஒருங்கே — ஒருசேர: எல்லாவற்றையும் என்றபடி.

இப்பாடலில் புரங்களைச் சிரித்தெரித்தது, மாரனை விழித்தெரித்தது, புலியை உரித்துடுத்தது, காலனை யுதைத்துருட்டியது, அரக்கனை நெரித்தருளியது என்ற வீரங்கள் பேசப் படுகின்றன.

"ஒட்டாத வாளவுணர் புரமூன்றும்
ஓரம்பின் வாயின் வீழக்
காட்டானைக் காமனையும் காலனையும்
கண்ணினொடு காலின் வீழ
அட்டானை.................." திருநாவு: தேவா.

"கருவரைசூழ் கடலிலங்கைக் கோமானைக் கருத்தழியத்
திருவிரலால் உதகரணம் செய்துகந்த சிவமூர்த்தி"
திருநாவு: தேவா.

"திரியு முப்புரந் தீப்பிழம்பாகச் செங்கண்மால் விடை மேற்றிகழ் வானைக், கரியின் ஈருரி போர்த்துகந்தானைக் காமனைக் கனலா விழித்தானை" சுந்தரர்: தேவா.

"காமன் உடலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமகள் நாசிசிரம் பிரமன் கரமெரியைச்
சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோணோக்கம் ஆடாமோ."
திருவாசகம்.

"முன்னம், வரைத்தனி வில்லாற் புரத்தை அழலூட்டிக்
கண்படை யாகக் காமனை யொருநாள்
நுண்பொடி யாக நோக்கி யண்டத்து
வீயா அமரர் வீயவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத் திருவமு தாக்கி
இருவர் தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்த்த புதுவெயி லெறிப்ப
எண்ணருங் கோடி இருடி கணங்கட்குப்
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக........."

திருவிடைமருதூர் மும்மணிக் கோவை.

"திருவடி விரலுகிர் விழி சிரிப்பினால்
மருவலர்க் கடந்தருள் மதுகை யெம்பிரான்"

காஞ்சிப் புராணம்.

முதலிய திருவாக்குக்கள் பற்றி யுணர்க. இனி, "இருக்கு வேதத்தில் சிவபிரானை "வீரன்" என்றது காமன், இமயன், திரிபுரத்தர், தக்கன் முதலியோரைப் பங்கப்படுத்தினமை பற்றி என்க" என்பது சதுர்வேத தாற்பரிய சங்கிரகம். சிவபெருமானை வீரன் எனக்கூறும் இருக்கு வேத மந்திரம் "அபிநோ வீரோ அர்வதி க்ஷமேத ப்ரஜாயேமஹி ருத்ரப்ரஜாபி" என்பது. சிவபெருமான் தீயன செய்தாரைத் தண்டித்து அவரவர்கள் செய்த சிவாபராதங்களைப் போக்கி ஆட்கொள்ளுதல் மறக் கருணையின்பாற்படும். இதனை,

"இறைவனிங் கேற்பதென்னை இதமகி தங்க ளென்னில்
நிறைபர னுயிர்க்கு வைத்த நேசத்தி னிலைமை யாகும்
அறமலி யிதஞ்செய் வோருக் கநுக்கிர கத்தைச் செய்வன்
மறமலி அகிதஞ் செய்யின் நிக்கிர கத்தை வைப்பன்"

"நிக்கிர கங்கள் தானும் நேசத்தா லீசன் செய்வ
தக்கிர மத்தாற் குற்றம் அடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
இக்கிர மத்தி னாலே யீண்டற மியற்றி டென்பன்
எக்கிர மத்தி னாலும் இறைசெயல் அருளே என்றும்"

"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொ
[லாற்றின்
வந்திடா விடினு றுக்கி வளாரினு லடித்துத் தீய
பந்தமு மிடுவ ரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவு மென்றும்"

எனவரும் சிவஞான சித்தித் திருவிருத்தங்களான் உணர்க.

*41.* அகழ்ந்து பறந்தவர் — அகழ்ந்தவர் பறந்தவர் என விகுதி பிரித்துக்கூட்டுக. மகாவராக வடிவாய்க் கீழே அகழ்ந்து சென்ற திருமாலும், அன்னப்பறவை வடிவாய் மேலே பறந்து சென்ற பிரமதேவரும் என்க. எண்ணும்மையுடன் மூன்றன் உருபுகளும் தொக்கன. அண்ணலன் — அணுகப்படாதவர். இதனை "திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராச் சேவடியை" எனவும்,

"செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம்" எனவும் வரும் திருவாசகத்தானும்,

"ஆழ்ந்து காணார் உயர்ந்தெய்த கில்லார் அலமந்தவர்
தாழ்ந்து தந்தம் முடிசாய நின்றார்க்கிடம்......கேதாரமே."
எனவும்,

"கீண்டுபுக்கார் பறந்தார் அயர்ந்தார் கேழலன்னமாய்க்
காண்டுமென்றார் கழல்பணிய நின்றார்க்கிடமாவது புகலியே'

எனவும் வரும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரங்களாலும் அறிக. மண்சுமந்து வருந்தியமையை —

" கலிமதுரை மண்சுமந்து கூலிகொண்டக் கோவான் [மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய் "

என்னும் திருவாசகத்தும், திருவிளையாடற் புராணத்தும் காண்க.

42. மின்னிடையார்—தாருகவனமுனிவருடைய பத்தினிகள். என்னையும்: உம்மை இழிவு சிறப்பு. தேவர்கள் ஒரு காரணத்தால் பெண் வடிவங் கொண்டிருந்தாராக, அவர்களுடைய பக்குவம் நோக்கிச் சீவபோதங் கைக்கொண்டு சிவபோதம் அருளினர் சிவபிரான் என்ப. அன்னம் இரத்தல்—சீவ போதங்கொள்ளல். மின்னிடையார் மனைமேவல் ஈம்மனோர் போலக் காமங்கருதியன்று, இறைவன் ஞானமே திருமேனியாகக் கொண்டவர் ஆகலான். இறைவன் ஆண்டான்: உயிர்கள் மீளா அடிமைகள். பெண்கள் என்றது அடங்கி வாழும் உயிர்களை எனினும் ஆம்.

43. ஆவகை—ஆகும் வகை: பசுநிலையிற் பிரிந்து சிவ ஞானியாகும் வகை என்க. மூவர்—பிரமன், மால், உருத்திரன் என்போர். முன்னவன்—முற்பட்டவன். நாவலர் கோன்—சுந்தரமூர்த்திநாயனார். நள்ளிருள்—நடு இரவு. அர்த்த ராத்திரி. அடியார்மாட்டு எளியவர் என்பது குறிப்பித்தபடி. "காண்டற் கரிய கடவுள் கண்டாய் கருதுவார்க் காற்ற எளியன் கண்டாய்" என்பது திருநாவுக் கரசு நாயனார் தேவாரம். இதனை,

"நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
தள்ளாக் காதல் தணித்தற் கம்ம
பரவை வாய்தலிற் பதமலர் சேப்ப
ஒருகா லல்ல இருகால் நடந்தும்
எளியரின் எளிய ராயினர்
அளியர் போலும் அன்பர்கள் தமக்கே." எனவும்,

"பரவைதன் மனைவயிற் பாவலன் ஏவலின்
இருமுறை திரிதலின் எளியனென் றெளியனும்
பரவுவன் மன்றம் பணிந்து": எனவும்,

"ஒருபெரும் புலவனோ டுடல் தீரப்
பரவை வாய்தலிற் பாயிருள் நடுநாள்
ஏதமென் றன்னு திருகா லொருகால்
தூதிற் சென்றநின் துணையடிக் கமலம்" எனவும்

ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் அருளியமை காண்க.

44. பன் மறை — பல சாகைகளையுடைய வேதங்கள். ஆயிரம் சாகை என்பது வழக்கு. பரன்—மேம்பட்டவர், கொன் மிகு—அச்சம் மிக்க. கூளி—பேய்கள். வேதங்களாலும் சிவபிரான் அறியப்படாதவர் என்பது:— "அல்லையீ தல்லையீதென மறைகளும் அன்மைச், சொல்லி னுற்றுதித் திளைக்கும் இச் சுந்தரன் ஆடல்" என்பது பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம். அல் நடமாடினன்—இரவில் தாண்டவம் செய்தார்.

45. ஆமையின் ஓடு — திருமாலாகிய ஆமையின் ஓடு. மார்பிற் பதக்கமாகச் சிவபிரான் அணிந்தவரலாறு. காமம் அறுத்தவர் — பஞ்சேந்திரிய நிக்கிரகம் செய்த பெரியோர். தாமம் — மாலை. கோமள மேனி — அழகிய திருமேனி. "முற்றலாமை யிளநாகமொ டேன மருப்பவை பூண்டு" சம்ப: தே.

46. குழைத்து—உள்ளம் உருகச்செய்து. வழுத்தபு—குற்றம் நீங்கிய: இழித்த புறச்சமயத்தவர்—இழிவாகிய புறப்புறம்—புறம் என்னும் புறச்சமயத்தவர்கள். பான்மை—தன்மை. புறப்புறச் சமயங்கள்:— உலோகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதம் என ஆறு. உலோகாயதத்தில் தேகான்மவாதம், இந்திரியான்மவாதம், சூக்கும தேகான்மவாதம், பிராணான்மவாதம், தத்துவ சமூகான்ம வாதம்,

அந்தக்கரணான்ம வாதம் முதலிய உட்பிரிவுகள் உண்டு. நால்வகை பௌத்தமாவது—மாத்தியமிகம், யோகாசாரம், சௌத்திராந்திகம் வைபாடிகம் என்பன. ஆருகதத்தில் நிகண்டாவாதம் என்னும் உட்பிரிவுண்டு. சூனியான்ம வாதம், ஏசுமதம் மகம்மதிய மதம் முதலிய புதிய மதங்கள் பலவும் புறப்புறச் சமயங்களில் அடங்கும் என்க.

புறச்சமயங்களாவன—தருக்கம், மீமாஞ்சை, ஏகான்ம வாதம், சாங்கியம், யோகம், பாஞ்ச ராத்திரம் என ஆறு. தருக்கத்தில் வைசேடிகம், நையாயிகம் என்னும் உட் பிரிவுகளும்; மீமாஞ்சையில் பட்டமதம், பிரபாகரமதம் என்னும் உட்பிரிவுகளும் உண்டு. ஏகான்ம வாதமானது மாயாவாதம், பாற்கரியவாதம், கிரீடாப்பிரம வாதம், சத்தப்பிரம வாதம் என நான்கு வகைப்படும்.

புறப்புறச்சமயங்கள் வேத சிவாகமங்களாகிய ஆதி நூல்களைப் பிரமாணமாகக் கொள்ளா. புறச்சமயங்கள் வேதத்தை உடம்பட்டு சிவாகமத்தைப் பிரமாணமாகக் கொள்ளா.

47. பால்மதி — பால்போலும் வெள்ளிய சந்திரன்; இளம்பிறை என்க. மா முதல்—சிறந்த முழு முதற் கடவுள். மேன்மை இல் வாணன் — சிறந்த குணம் செயல்களில்லாத வாணாசுரன். அவன் வியன்பதி — சோநகரம். மலை மாது — மலை மகளாகிய உமாதேவியாருடன். 92-ஆம் பாடல் காண்க.

48. தமைத்தெளிவோர் தெளி — சிவபெருமானே பரம்பொருள் எனத் தெளிந்த ஞானமுடையோரைத் தெளிகின்ற. "பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க்கு என்றும் பெருந்துணையை" என்பது திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம். "தேவரில் ஒருவனென்பர் திருவுருச் சிவனைத் தேவர், மூவராய் நின்றதோரார் முதலுருத்தேச தென்னார்" என்ற சிவஞான சித்தித் திருவிருத்தம் காண்க. "மூவரென்றே யெம்பிரானொடும் எண்ணி விண்ணாண்டு மண்மேல், தேவரென்றே இறுமாந்து என்னபாவம் திரிதவரே" என்னுந் திருவாசகமும்

சிந்திக்கத்தக்கது. மூவராயும் மூவர்க்கு மூலமாயும் நிற்பவர் சிவபிரானே எனத் தெளிந்தவர். இதனை,

"அரனென்கோ நான்முக னென்கோ வரிய
பரனென்கோ பண்புணர மாட்டேன்"

என்னும் அம்மை திருவந்தாதியானும் அறிக.

கருணாகரன் — அருளினாற் கடல்போன்றவன். குமைத்தல் — அழித்தல்.

49. கொண்டல் — மேகம். எயில் — மதில்.

50. காரண காரணன்—முதற்காரணம் துணைக்காரணங்கட்கு வேறாய் நிமித்தகாரணனாய் நின்று ஆக்குபவன். உலகத்துக்கு முதற்காரணம் மாயை. துணைக்காரணம் சத்தி. நிமித்தகாரணம் சிவபிரான். குடம் காரியம், முதற் காரணம் மண், துணைக்காரணம் தண்ட சக்கரம், நிமித்தகாரணம் குயவன் அவைபோல. பேருணர்வோர் — சிவஞானிகள். உயங்கும்- வருந்தும். ஆர் அருள் — நிறைந்த அருள்,

"காரிய காரணங்கள் முதல்துணை நிமித்தங் கண்டாம்
பாரின் மண் திரிகை பண்ணு மவன்முதல்துணைநிமித்தம்
தேரின்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தியாக
ஆரியன் குலால னாய்நின் றாக்குவன் அகிலமெல்லாம்"

— சிவஞான சித்தியார்.

51. பவக்கடல் — பிறவியாகிய சமுத்திரம். உழலும்— வருந்தும். அங்கணன்—சிவபெருமான். பரித்திடும் பான்மை —செய்யுந்தன்மைகள்.

"சங்காரக் கடவுள் இங்ஙனம் கூறிப் போந்த தோற்றம் முதலிய தொழில்களைச் செய்தற்குக் காரணம் யாது? என்னில் "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" என்பது முதலிய திருவாக்குகள் பற்றி. ஒருசாரார் அத்தொழிற்குக் காரணம்

விளையாடற் கருத்து என்பர்: ஒருசாரார், பற்பல விளையாட்டு —படைத்தல் முதலியன. "ஐயா நீ ஆட்கொண் டருளும் விளையாட்டின் — உய்வார்கள் உய்யும் வகை யெல்லாம் உய்ந்தொழிந்தோம்" என்பது முதலிய திருவாக்குக்கள் பற்றி, விளையாட்டு என்றது 'ஐங்கலப்பாரம் சுமத்தல் சாத்த னுக்கு விளையாட்டு' என்பதுபோல அத்துணை எளிதில் செயப் படுதலை நோக்கியே ஆகலின் அக்கருத்தும் உயிர்கட்குப் பெத்த காலத்துச் சுவர்க்காதி போகமும் பத முத்திகளும் முத்திக்காலத்து வீடுபேறும் கொடுத்தற் பயத்தது என்பர். அவ்விரண்டும் தம்முள் முரணுமையால் உயிர்கள் மேற்சென்ற கருணையே ஆண்டைக்குக் காரணம் எனவும்.

"ஒடுக்கம் தோற்றம் நிலை மறைப்பு அருள் என்பது ஐந்தும் முறையே இளைப்பாற்றலும், கன்மம் கழியும் முகத் தால் மலபாகம் வரச்செய்தலும், கன்மம் கழியுமாறு அதனை நுகர்வித்தலும், கன்ம ஒப்பு வருவித்து மலங்களை முதிர்வித்த லும், பந்தம் விடுவித்தலும் ஆகிய உறுதிப்பயத்தன ஆக லான் ஐந்தொழிலும் அருட்செயலே. ஆகலின், இவற்றுட் சில மறத் தொழிலே போலும் எனப் பழித்தலை ஒழிவாயாக." எனவும் ஸ்ரீமாதவச் சிவஞான சுவாமிகள் சிவஞானசித்தியார் சுபக்கத்து உரைத்த பொழிப்புரைகளான் அறிக.

52. அரு மறை நான்கு—திருவருள் ஞானம் பெற்ருர்க் கன்றி ஏனையோரால் பொருளொருமை காண்பதற்கு அருமை யாகிய வேதங்கள் நான்கும் என்றவாறு. "அவை தைத்திரிய மும் பௌடிகமும் தலவகாரமும் சாமவேதமும் ஆம். இனி, இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமும் என்பாரும் உளர். அது பொருந்தாது.........பின்னர் வேதவியாதர் சின்னுட் பல் பிணிச் சிற்றறிவினேர் உணர்தற்கு நான்கு கூருக இவற்றைச் செய்தார் ஆதலின்." என உச்சிமேற் புலவர்கொள் நச்சி ஞர்க்கினியர் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்து உரைத்த உரையான் உணர்க. இரண்டு நாளிற் பொன்றிடும் மனிதர் — சின்னுட் பல்பிணிச் சிற்றறிவினேர். அவர் உணரார்

என்பதைக் கீழ் வரும் சிவதத்துவ விவேகம் 6-ஆம் செய்யுள் நோக்கி அறிக.

" உன் திரு வடிக்கீழ் உறுதியாம் அன்பும்
உன் திரு வருளினுற் கிடைப்ப
தன்றிநூல் பலவும் ஆய்ந்ததால் உரைசெய்
அளப்பருந் திறமையால் மதியால்
மன்றவே கிடைப்ப தன்றுமற் றதனை
மாதவம் செய்திலாக் கயமை
துன்றிய புலையோர் யாங்ஙனம் பெறுவார்
சோதியே கருணைவா ரிதியே." என்பது.

53. திருநீறணிதல், திருவைந்தெழுத்தோதல், உருத்திராக்கம் பூணுதல், அடியார் ஏவல் ஆற்றல் முதலியன மக்கள் உய்வதற்கு உரிய உறுதிகளாம். அடியார் ஆவார் இவர் என்பது :—

" அடியார் அரனடி ஆனந்தம் கண்டோர்
அடியார் ஆனவர் அத்தரு ளுற்றோர்
அடியார் பவரே அடியவர் ஆமால்
அடியார் பொன்னம்பலத் தாடல்கண் டாரே."

என்னும் திருமந்திரத்தால் தெளிவுறும்.

54. மாறிலாக் கருணை — நீங்காத அருள். கைம்மாறில்லாக் கருணை எனினும் ஆம். உள்ளே நிலவிய நகை — புன்னகை; மந்தகாசம். தியானிக்கு முறை கூறிற்று.

55. "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்" என்னும்

திருவாசகப்பகுதியை இச்செய்யுள் நினைவூட்டுகிறது.

என்னை — சிவபோதத்தை. உன்னை — சிவபோதத்தை. சிவபோதம் உண்டாகவே சகசமாயுள்ள ஆணவமலம் வலி கெட்டொழிந்தது. அதன் காரணமாக வரும் கன்மமும் மாயையும் தொலைந்தன. உடற்சுமையும் கழிந்தது. பரமானந்தம் விளைந்தது என்க. இதனை, "ஓடிய தாணவம் உற்றது பாசகன் மங்களொத்த, வாடின பல்வகைத் தோற்றம் மலரயன் மால் முதலோர், வீடினர் செய்கை விளைந்தது போகம்" என்ற பகுதி நோக்கி யுணர்க. "பாழான மலமற்று வினையற்று மாயையின் பற்றுவிட்டு உனை அறிந்து உன், அம்பொனடி நீழல் சேர்ந்து ஆனந்தம் உண்டு இருத்தல்" எனவும், "பண்டறியாமை பிடித்துவிட்டேனை விடாதுபற்றிக், கொண்டு குணவழி விட்டுத் திருத்தியென் கோதகற்றிப், புண்டரிகப் பதந் தந்தாய்க்கென் னுலொரு போகமுண்டோ" எனவும் வரும் பெரியோர் வாக்குக்களும் சிந்திக்கத் தக்கன.

"உன்போகந் தந்தா யுனக்குவினை யேனருந்தும்
என்போகந் தந்தேனென் னீசனே—இன்புருவா
கைம்மாறுண் டாமோ கவிணு வடுதுறையின்
அம்மானே அம்பலவா ணு"

பெரிய பிள்ளை பாடல்.

"என்னையு முனையுந் தன்னையுங் காட்டா திந்திய விடயமே காட்டி, இயல்வினை மாயை யிரண்டையு மெனையு மிணக்கிய வாணவ மலத்தின்—, தன்னுறு வழிநின் சத்தியை நடாத்தித் தருமதன் சத்திக ளெல்லாம், தயங்குநின் னுருவமூன் றினுன் மாற்றித் தாணிழல் தந்துகாத் தனையே" எனவும், "தணவிலா மலத்தின் குருடனேற் குடலங் தாமொரு கோலெனக் கொடுத்துச் சத்தமே யாதி விடயமோ ரைந்தின் றன்வழி புசித்திடத் தந்து—, குணவழி நடவார் குணவழி நடந்து குணத்தினைத் திருப்புவார்போலக், கொடுவினையொப்புச் சத்தினி பாதங் கூர்மல பாகமுங் குறித்தே—, இணையிலா வின்ப வடிவமா முன்னே டென்னையு மிரண்டற வைத்தாய்" எனவும், சிவபெருமான் பெத்த நிலையில் மறைந்து நின்று காரியப்படுத்துகின்ற முறைமையும், முத்தி

நிலையில் பிரகாசித்து நின்று உபகரிக்கின்ற 'முறைமையும் உலகுடைய நாயனார் கூறியவாறு பற்றி உணர்க "கோலங் கொண்டவா றுணராதே" என்னும் இருபா இருபது பற்றியும் இச் செய்யுட் பொருள் தெளியப்படும். மற்றும், "மலமறுத் தகலாத திருவடித் தாமரை என் முடியில் ஊன்றி, —அங்க முயிர் பொருளெலாம் கைக்கொண்டு நாயினேற்கு, ஆனந்த முத்திதந்த அருள்ஞான வாரியே" என ஸ்ரீமாதவச் சிவஞான சுவாமிகள் ஸ்ரீஅகிலாண்டேசுவரி பதிகத்தில் அருளினார்கள்.

இத்தகைய பேரருளுக்குச் சிற்றுயிர்கள் செய்யும் கைம் மாறு யாதேனும் உண்டோ? இல்லை எனினும் அகங்காரம் தலையெடாதபடி இருத்தலே கைம்மாறும் என்க.

56. புன்மை—கீழாந்தன்மை. புன்மையாவது:—

"ஆயத்துள் நின்ற ஆறு சமயங்களும்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா
மாயக் குழியில் விழுவர் மனைமக்கள்
பாசத்தி லுற்றுப் பதைக்கின்ற வாறே"

திருமந்திரம்.

"சாவிபோம் மற்றைச் சமயங்கள் புக்குநின்று
ஆவி யருதேயென் றுந்தீ பற
அவ்வுரை கேளாதே யுந்தீ பற."

திருவுந்தியார்.

"முன்னமிரு மூன்றுசம யங்களவை யாகிப்
பின்னையருள் செய்தபிறை யாளனுறை கோயில்"

தேவாரம்.

"ஆயாதன சமயம்பல அறியாத அந்நெறியின்
தாயானவன் உயிர்கட்குமுன் தலையானவன் மறைமுத்
தீயானவன் சிவனெம்மிறை செல்வத்திரு வாரூர்
மேயானவன் உறையும்மிடம் வீழிம்மிழலையே."

தேவாரம்.

'புன்னெறி யதனிற்செல்லும் போக்கினை விலக்கிமேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையு மடிய னாக்கி யிருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள்போற்றி"

கந்தபுராணம்.

புறச்சமய நூல்வழி ஒழுகியும், அகச்சமய நூல்வழியே சென்று ஒழுகியும், ஸ்மிருதி நூல் சொல்லும் வழியே சென்று ஒழுகியும், வேதங்களிலே கூறப்பட்டவாறு ஆச்சிரம தரும நெறிகளின் வழுவாதொழுகியும், செயற்கரிய தவங்களைச் செய்தும், அரிய கலை ஞானங்கள் பலவற்றைப் பயின்றும், வேதங்களை ஓதியும், சிறப்பையுடைய புராணங்களை அறிந்தும், உபநிடதப் பொருளை மிக ஆராய்ந்து தெளிந்தும் இங்ஙனம் சோபான முறையால் பல பிறவிகளிலும் மேற்பட்டு நிகழ்ந்து முற்றுப்பெற்றுச் சைவக்கூற்றின் முடிபாகிய சித்தாந்த சைவத்தைத் தலைப்படுவர். அன்றி, ஒருங்கே ஒரு காலத்து முற்றுப்பெறுவதன்று. இச்சித்தாந்த சைவத்தினும் சரியை கிரியை யோகங்களை அனுட்டித்து முற்றியபின் ஞானத்தைப் பெற்று அதனாற் சிவபிரான் திருவடியைச் சேர்வர் என்க. இதனால், புறச்சமயநெறி நிற்றல் முதலியன எல்லாம் சைவத்திறத்து அடைதற்கு சோபான முறையால் வாயிலாகக் கூறப்பட்டது. இதனை, "புறச்சமய நெறிநின்றும் அகச் சமயம் புக்கும்" என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா னுணர்க.

இனி, சைவம் சிவசம்பந்தம் உடையது. சிவம் மங்கலம். தான் மங்கலமாயிருந்து தன்னையடைந்த உயிர்களையும் மங்கலத்தன்மையுடையதாகச் செய்வது எதுவோ அது சிவம் என்ற சொல்லால் சொல்லப்படுகிறது. இதனால் அந்தப் பொருளையல்லாத மற்றவைகளெல்லாம் அமங்கலமுடையன: அமங்கலத்தன்மை வாய்ந்தன ஆம். மற்றச் சமயங்களும் அமங்கலமுடையனவே; அச்சமயங்களால்கூறப்படும் தெய்வங்களும் அமங்கல வடிவினவே. எனின், அத்தெய்வங்களாலும்

சமயங்களாலும் யாதொரு பயனுமில்லையோ என்னும் வினு எழும் அன்றே. அவ்வவற்றின் ஏற்றங்குறைவுகளுக்கு ஏற்பப் படிப்படியான பயனும் உண்டெனக. 'வீடுசேர்க்கும் சைவ சித்தாந்தம் என்றே தேறினேன்' என்னும் தொடர்மொழியில் 'சைவசித்தாந்தமே வீடுசேர்க்கும் என்று தேறினேன் என விகுதி பிரித்துக் கூட்டுக. தேற்றேகாரம். "சைவத்தின்மேற் சமயம் வேறிலை, அதிற்சார் சிவமாம், தெய்வத்தின்மேல் தெய்வம் இல்" என்னும் உண்மை இதனுல் தெளிவாம். சைவதர மான சமயம் வேறு இல்லை, அது அதீத சமயம் என்க. "அயர் வறச் சென்னியில் வைத்து ராஜாங்கத்தில் அமர்ந்தது வைதிக சைவம் அழகிதந்தோ" எனவும், சந்தான கற்பகம்போல் அருளைக்காட்டத் தக்கநெறி இந்நெறியேதான் சன்மார்க்கம்" எனவும் தாயுமானவ அடிகள் அருளியமை காண்க.

இனி, சமயமானது மக்கள் அறிவு விளக்கம்பெற்று உறுதி எய்தி இன்ப வாழ்வு அடைதற்குச் சாதனமாயுள்ளது. ஒவ்வொரு சமயத்தினரும் தங்கள் தங்கள் சமயத்திலே பிரதி பாதிக்கப்படுகின்ற கடவுளையே முழு முதற் கடவுள் என்று சாதிப்பர்; அதற்கேற்றபடி பற்பல நூல்களை எடுத்துக் காட்டிப் பேசுவர். அவர் கொள்கையினைப் பொய் என்ருவது மெய் என்ருவது காட்ட வாக்கு வல்லபத்தால் ஏலாது.

சைவசமயமானது தான் பரம்பொருள் எனக் கூறும் தெய்வத்திற்கு நால்வகை யோனி வாய்ப்பட்டுப் பிறந்து இறந்து செல்லும் கர்ம கதி கூறினதில்லை; பிற சமயங்களும் சாத்திரங்களும் சொல்லும் பொருளெல்லாம் தன்னிடத்து அடங்கக்கொண்டு அவை சொல்லாத பல நுண் பொருள் சொல்லி மேம்பட்டு விளங்கும். சமயங்கள் எல்லாம் உயிர் களின் கன்மபேதத்துக்கு ஏற்ப முதற்கடவுளால் நிறுத்தப் பட்டனவே. யாதொரு தெய்வங்கொண்டு வழிபாடு செய்யி னும் முதற்கடவுள் அவ்வத்தெய்வங்களிடமாக நின்று அவ் வழிபாடு கொண்டருளி அருள் வழங்கும். முக்கூற்றுப்புறச் சமயங்களையும் தனக்குச் சோபமானமாகக் கொண்டு தான் தலைமைபெற்று விளங்குவது 'சைவ சித்தாந்தமே' ஆம்.

இனி, தத்துவஞான சித்தியுடையார் நிறுத்திய அகச் சமயங்கள், கலைஞான சித்தியுடையார் நிறுத்திய அகப்புறச் சமயங்கள், பிராகிருத விசேட புத்திமான்கள் நிறுத்திய புறச் சமயங்கள், பிராகிருத சாமானிய புத்திமான்கள் நிறுத்திய புறப்புறச் சமயங்கள் ஆகிய எல்லாம் முழுமுதற் கடவுள் நிறுத்திய அதீத சன்மார்க்க சைவசித்தாந்த சமயத்தினுக்குச் சோபானமும் வியாப்பியமுமாய் விளங்குவன. தத்துவ ஞான சித்தியுடையார் முதலியோர் நிறுத்திய சமயங்கள் எல்லாம் ஒவ்வோர் வகுப்பினராயுள்ள அதிகாரிகளுக்கே உரியனவாய்க் காலந்தோறும் தன்மை வேறுபட்டு வருகின்றன. அவ்வாறின்றி, முழுமுதற் கடவுள் நிறுத்திய அதீத சுத்தாத்துவிதசித்தாந்த சைவசமயமாகிய செந்நெறி மற்றைச் சமயங்கள் சொல்லும் பொருள்கள் எல்லாம் தன்னிடத்து அடக்கிக் கொண்டு எக்காலத்தும் வேறுபடாது விளங்கும் பூரணமார்க்கம் ஆம். சைவசமயமானது மனிதர்களுடைய இகபர சுகங்களுக்கு இன்றியமையாத சாதகங்கள் எல்லாவற்றையும் அவர்களுக்குக் குறைவறக் கொடுக்கும் ஒரு கற்பகத்தரு போன்றது. பரம்பரையில் முத்திக்கு வாயிலாகும் சமயகோடிகள் போலாது, சாட்சாத்தாகவே முத்திக்கு வாயிலாக உள்ளது முழுமுதற் கடவுள் நிறுத்திய அதீத அருள்மார்க்கமாகிய சைவ சித்தாந்தசமயமே ஆம். யோகிகள், சித்தர்கள், வேதங்கள் உபநிடதங்கள், இதிகாசங்கள், சிவகணங்கள், பிரமன், விஷ்ணு, இந்திரன், உருத்திரர், இருடியர், சாம்பவர், பாசுபதர், மகாசைவர் .திட்சிதர்கள் முதலிய யாவரும் சிவபிரானையே பூசித்தும், அர்ச்சித்தும், துதித்தும், தியானித்தும், உபாசித்தும், பஞ்சாக்கரத்தையே ஜெபித்தும் வருகிறுர்கள் என்பது பிரசித்தமாம். ஆதலால் சைவ சித்தாந்த சமயத்தையன்றித் தாயகம் வேறில்லை எனச் சிவஞானிகள் கூறுகின்றனர். இதனை, பஸ்மஜாபாலம்: "லிங்கரூபிணம் மாம்ஸம் பூஜ்ய சிந்தயாதி யோகிஸ்ஸித்தாஸ் ஸித்திம் கதாய" என்று தொடங்கிக் கூறும். விரிவஞ்சி விடுத்தாம்; அங்கே காண்க.

57. அருள்வழி நடத்தல், மருள்வழி நடத்தல் ஆகிய இரண்டும் ஒன்றற்கொன்று மாறுபாடு உடையன. அதனைச்

சிறிது ஆராய்தல் வேண்டும். அறிஞர் அருள் வழியையே நாடுவர். ஏனையோர் உலக வாழ்வாகிய மருள் வழியையே நாடுவர். அருள்வழி பாசமறுக்கும்; மருள்வழி மேலும் மேலும் வல்வினையைத் தேடித்தொகுக்கும். அறிஞர் பிறந்ததற்காக உண்பர்; பிறர் உண்பதற்காகவே பிறந்தவர். அறிஞர் காய் இலை முதலியவற்றைப் பசித்தவேளைக்குக் கிடைத்ததை உண்பர்; பிறர்கிருத குளபாயசத்துடன் முயன்று எந்நேரமும் உண்பர் அவர் முழைகளில் வாழ்வர்; பிறர் மாடமாளிகைகளில் உல்லாசமாக வாழ்வர் அவர் அசையாதிருப்பர்; பிறர் ஓடியாடிப் பாடித்திரிந்து பொழுது போக்குவர். அவர் குளிர்ந்த நீரில் மூழ்குவர்: பிறர் வெந்நீரிலே மூழ்குவர். அவர் பஞ்சாக்கினி மத்தியிலிருப்பர்; பிறர் குளிர்ந்த சோலை நீழலில் இளந்தென்றல் வீச இருப்பர். அவர் என்பு எழுந்தியங்கும் யாக்கையுடையராய் இருப்பர்; பிறர் ஊசி நுனையும் புகும் இடமின்றித் தசைப்பிண்டம்போல் இருப்பர். அவர் தலைமயிர் சிக்குண்ணச் சடைதாங்கி இருப்பர்: பிறர் எண்ணெயிட்டுத் தயிமயிர் வாரி இன்பமுற இருப்பர். அவர் வாயுவை அடக்கி வாழ்வர்; பிறர் பெருமூச்சுவிட்டுத் தாழ்வர், யோசனையில் ஆழ்வர். அவர் மனத்தினை அடக்குவர்; பிறர் மனம்போன வழிச்செல்வர். அவர் மௌனமுற்றிருப்பர்; பிறர் ஊர் விவகாரமெல்லாம் பேசியும் வாய் ஓயார். அவர் வனமூடிருப்பர்; பிறர் காட்சி நிறைந்த நகரிடையே அலைவர். மருள்வழி மாயா காரியத்தால் பெருகுவது. மருள்வழியை யொழித்து அருள் வழியை நாடுவோர் மாயாகாரியமாகிய தனு கரண புவன போகங்களை விசாரித்து அவை நிலையல்லன என முதல்வன் அருளால் அறிந்தபோதே அம் மயக்கம் ஒழிவர். அம் மயக்கம் ஒழியவே இதுகாறும் அத்துவிதமாய் இருந்த முதல்வன் வெளிப்பட்டருளுவன். வெளிப்பட்டருளவே ஆணவம் சத்தி கெட்டு அருள் வழியிலே நிற்பர் என்க. இதனினும் தெளிந்த வழி ஒன்றுண்டு, அது எளிது, கேட்பீராயின் சொல்லுவேன், என்று கலைசையில் வாழும் சிவபிரானை உங்கள் வாழ்நாளில் ஒருமுறையாவதுசென்று கும்பிடும் என்றும் இன்பத்தேன் உண்ணலாம் எனக் கருணையுடன் அருளுகிறார்கள் இச்செய்யுளில்.

பிராரத்த கன்மம் உள்ளவரையில் உலகத்திலே பலபல சென்மங்களில் பற்பல தனு கரண புவன போகங்களைக்கூடி நின்று அனுபவித்து உழன்று கொண்டே இருத்தல் வேண்டும். வினை முற்றும் அனுபவித்தும் அவ்வினை மறுபடியும் உண்டாவதற்கு ஏதுவாகிய ஆகாமிய வினை ஏருதபடி தடுத்துக் கொண்டபோது ஆன்மாவுக்கு இருப்பிடம் முதல்வன் திருவடியே யன்றி வேறில்லை என்க. "மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க்களிப்பவன்" சிவபிரானே ஆகலின் அம்முதல்வனைச் சென்று வழிபடவேண்டும். "நிலைபெறுமாறு எண்ணுதியேல்" என்ற திருவாக்கும் இதுபற்றி எழுந்ததே.

*61.* வாய் — வாய்மை: உண்மை. அம்மை ஒருபான் மகிழ்ந்த தலைவன்—அம்மையப்பர்: அருளுடன் கூடியசிவம்.

*62.* உழிதந்து — வருந்தி. புறச் சார்பு அகச்சார்புகள்— யான் எனது என்பன.

*63.* இறை—கடவுள்: உயிர்க்குயிராய்த் தங்கியிருப்பவன் என்றபடி. நம்பிவழிபாடு செய்பவர்க்கு உளதாகும் நன்மை கூறுவது இது.

*64.* சிவபிரான் சுட்டுணர்வினுல் அறியப்படாதவர் என்பது இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

*65.* பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் பெரும் பூதங்கள் ஐந்தும் புறப் பூதங்கள் என்று பேசப்படும். சூக்கும பூதம், அகப்புறப்பூதம், அகப்பூதங்கள் என்பன உள. ஐம்பெரும் பூதங்களும் தூல பூதங்கள். பிருதிவி மண்டலம் முதலாக ஐந்து மண்டலங்கள் உள. நிவிர்த்தி கலை முதலாக ஐந்துகலைகள் உள. நிவிர்த்தி கலைக்குப் பிருதிவிதத்துவம் ஒன்றே; அது பொன்மை நிறம்: பிரமா அதிதெய்வம். இரண்டாவது பிரதிட்டாகலை, அப்புதத்துவம் முதல் பிரகிருதி குணதத்துவம் வரை 23–தத்துவங்கள், படிக நிறம், நீலம் எனவும் கூறுவர்: விஷ்ணுமூர்த்தி அதிதெய்வம். நிவிர்த்திகலை பிருதிவிமண்டலம் எனப்பெயர் பெறும். பிரதிட்டா கலை

அப்புமண்டலம் ஆம். மூன்றாவது வித்தியா கலை, அது தேயு மண்டலம், புருடன் முதல் காரியமாயை இறுதியாகவுள்ள ஏழுதத்துவங்கள், அது செந்நிறம். உருத்திரன் அதிதெய்வம். நான்காவது சாந்திகலை, சுத்தவித்தை—ஈசுரன்—சாதாக்கியம் ஆகிய மூன்று தத்துவங்கள், அது புகை நிறம், வாயுமண்டலம், மகேசுரர் அதிதெய்வம். ஐந்தாவது சாந்தியாதீதகலை, விந்து-நாத தத்துவங்கள், சுத்த படிகநிறம், சதாசிவர் அதிதெய்வம் பூதங்களின் உள்ளும் புறம்பும் கலந்து நிறைந்திருத்தலின் அவைகளின் நிறங்கள் பற்றிச் சிவபிரான் நிறமும் பேசப்படும். அதனையே இங்குச் சிவந்தார், கரியார், வெளியார், பொன்னு வந்தார், பசியார், ஒளிவண்ணர் எனப் போற்றப்படுகின்றது. "வண்பொன்மை வெண்மை செம்மை கறுப்பொடு தூமவண்ணம்" என்பது சிவஞான சித்தியார்.

'நிறங்களோரைந்துடையாய்' எனவும், 'வெளியாய் கரியாய் பச்சையனே செய்ய மேனியனே' எனவும் வரும் திருவாசகம் காண்க. விரிஞ்சர்—பிரமர். முகில்வண்ணர்—திருமால்.

67. சரியாதி மூன்று—சரியை, கிரியை, யோகம். மை வைத்த தீயமலம்—ஆணவம். பாகம் — பக்குவப்படல்; மல முதிர்தல். "மலமுதிர்தலாவது தனது சத்தி தேய்தற்குரிய துணைக்காரணங்கள் எல்லாவற்றோடுங் கூடிப் பதனழியும் செவ்வித்தாதல். உயிர் பருவமடைதலாவது அறிவித்தவாறே அறியவல்லும் செய்வித்தாதல்" என்பது சிவஞானசித்தியார் பொழிப்புரை. செய் — வயல். தற்று — நெருங்கி. 'உயிருக்கு சற்குருவாய் வருவது அரனே' என்பது சூர்ணிக்கொத்து.

"இருவினை யொத்திட வின்னருட் சத்தி
மருவிட ஞானத்தி லாதன மன்னிக்
குருவினைக் கொண்டருட் சத்திமுன் கூட்டிப்
பெருமல நீங்கிப் பெருமலஞ் சுத்தமே."

— திருமந்திரம்.

இருவினை யொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்னும் இவற்றின் விரிவெல்லாம் சிவஞானபாடியம் நோக்கி அறிக.

இனி, "ஆன்மாக்களுக்கு விஷய உணர்ச்சி உண்டாதற்கும் அவ்வுணர்ச்சியால் விஷய அனுபவம் வருதற்கும் தனு கரண புவன போகம் என்னும் நான்கினையும் தந்ததுபோல, சிவஞான உணர்ச்சி உண்டாதற்கும் அவ்வுணர்ச்சியால் சிவாநுபவம் வருதற்கும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு வகையாயுள்ள தவசாதனங்களே ஞானசாதனமாம். எனவே, தனுவாகிய சரீரச்சார்பால் விளையும் பாசச்சார்பை ஒழித்தற்குச் சரியையும், மனம் முதலிய கரணச்சார்பால் விளையும் பாசச்சார்பை ஒழித்தற்குக் கிரியையும், புவனச்சார்பால் விளையும் பாசச்சார்பை ஒழித்தற்கு யோகமும், போகச்சார்பால் விளையும் பாசச்சார்பை ஒழித்தற்கு ஞானமும் நியமிக்கப்பட்டன" என்பர் ஸ்ரீ ஆலாலசுந்தரம் பிள்ளையவர்கள்.

69. அட்டமூர்த்தியை யுணர்த்துவது இச்செய்யுள்.

"பாரும் நீரொடு பல்கதிர் இரவியும் பனிமதி ஆகாசம்
ஓரும் வாயுவும் ஒண்கனல் வேள்வியில் தலைவனுமாய்
நின்றார்"
— திருஞானசம்: தேவா.

"பற்றுமாகி வானுளோர்க்குப் பல்கதிரோன் மதிபார்
எற்றுநீர் தீக்காலும் மேலைவிண் இயமான னோடு
மற்றுமாயதோர் பல்லுயிராய் மாலயனு மறைகள்
முற்றுமாகி வேறுமானன் மேயது முதுகுன்றே."
— திருஞான: தேவா.

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமான
னாயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமா
யட்ட மூர்த்தியாகி"
— நின்ற திருத்தாண்டகம்.

“ நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப்
புணர்ந்து நின்றான் ” — திருவாசகம்.

“ இருபெருஞ் சுடரும் ஒருபெரும் புருடனும்
ஐவகைப் பூதமோ டெண்வகை யுறுப்பின்
மாபெருங் காயந் தாங்கியோய் ”
— ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள்.

70. சிவபிரான் அருளைப் பெறுதவருக்கு இவைகளால் யாதொரு பயனுமில்லை என்று கூறுகிறது இவைகளாற் பயன் சிவனருளைப் பெறுதலொன்றே என்க.

71. விடர்—காமுகர். தூர்த்தர்—கழிகாமமுடையோர்: வரைகடந்தொழுகுவோர். பேதையர்—அறிவிலார். கயவர்—கீழோர். வேழம்பர் — கழைக்கூத்தர். இவர் கூடாநட்பினர். “ அங்நட்பாவது விடரும் தூர்த்தரும் வேழம்பரும் போன்று பல்வகையால் நகுவித்துத் தாம் பயன்கொண்டொழிவாரோடு உளதாயது ” என்பர் — பரிமேலழகர்; குறள் — 817.

73. உடம்பின் இழிவு பேசப்படுகிறது. அன்றி, மாதர் மேல் காதல் வைத்துத் துன்புறாமல் மாதிருக்கும் பாதியன் திருவடியிற் காதல் கொள்ளும்படி நெஞ்சறிவுறுத்துகின்றார்கள்

74. குரங்கானது மரத்தில் கிளைக்குக் கிளை தாவிக் கொண்டு சஞ்சரித்தல் போல, மனமானது பிரபஞ்சத்தில் ஒரு பதார்த்தத்தை விட்டு ஒரு பதார்த்தத்தைத் தாவிக்கொண்டேயிருத்தல் சுபாவம். ஆகலின், ‘மனக் கருங்குரங்கே’ என விளிக்கின்றார்கள். மனத்தின் வழியே புத்தியைச் செலுத்துவதால் அடையும் பயன் யாது மில்லை. ‘மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்’ என்ற கருத்தும் இதுவே.

76. கொடிய சண்டாளன்–தத்தமக்கு விதிக்கப்பட்டுள்ள சாதியாசாரம் சமயாசாரம் முதலியவைகளைக் கைவிட்டொழுகுவோன். சைவாநுட்டானம், சிவபூசை, சிவவழிபாடு முதலியன இல்லாதவரைச் சண்டாளர் என்று சிவரகசியம் கூறுகிறது' பரமேதிகாசம் அது. 'சிவ' மூல மந்திரத்தின் பெருமை அளவில்லாதது. அப் பெருமை வேத சிவாகமங்களில் பேசப்பட்டுள்ளது. வேத சிவாகமங்களில் பயின்ற பெரியோர்கள் சிலர் அவைகளிற் கூறப்பட்டுள்ள பொருளை அறிந்தோ அறியாமலோ அவமதிக்கின்றனர்: நம்புகின்றிலர். அவரை ஊமர் என்றே நன்கு கூறலாம். சமயாசாரியர்களும் சிவ மூல மந்திரத்தைத் தமது பதிகங்களில் வைத்துப் போற்றியிருக்கின்றனர். அதன் பெருமையை யாவரும் உணர்ந்து உய்யுமாறு செயலாலும் போற்றியிருக்கின்றனர். இதனை நன்கு அறிந்து வைத்தும் செயல் முறையிற் போற்றுதார் ஊமரே என்பது துணிவாம். பெரும்பாலும் ஊமர்கள் காதும் செவிடுபட்டுள்ளது. அவர்போல, தாம் சுருதியில் அறிந்த உண்மையை வாயினுற் கூருமலும் அறிஞர் கூறுவராயின் அதனை மனத்தினுற் கொள்ளாமையே யன்றிக் காது கொடுத்துக் கேளாமலும் வாளா மீளா நரகுக்கு ஆளாகின்றனரே எனச் சுவாமிகள் இரங்கியருளுவதுடன் நில்லாது 'அவருடன் பயில் கொடியோன்' என என்னையும் அருளாது கழித்துவிடின் புகலில்லை நீரே அடைக்கலம் எனச் சிவபிரான் பால் விண்ணப்பமும் செய்கிருர்கள்: அவர்கள் கருணைவெள்ளம் இருந்தவாறு என்னே! முழுமுதற் கடவுளால் அருளிச் செய்யப்பட்ட வேத சிவாகமங்களிலும், சமயாசாரியர்கள் அருளிய திருமுறைகளிலும் எத்துணை நம்பிக்கை. பிறவியைப் போக்கும் எண்ணம் உடைய பெரியோர்களிடத்திலேதான் அதற்குரிய உண்மைச் செயல்களும் உளவாம். பிறர்பால் காணுதலியலாது. உலகநிலை வேறு. உலகிறந்த நிலை வேறு. பயிலுதல்—இடைவிடாமற் பழகுதல். பயிலுதலும் கொடுமை எனின், செயல் எவ்வளவு பெரும்பாதகம் ஆம். செப்பிடின் எனவே அவன் தீவினை அதனைச் செப்ப வொட்டாது என்பது தெளிவாம்.

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே."

என்பது திருமந்திரம்.

77. மாண்டகு—மாட்சிமைப்பட்ட. மாட்சிமையாவது எண்குணமுடைமை. தாண்ட அரும்—நீங்குவதற்கு அருமையான. நிரயக் கிடங்கு—நரகக் குழி: அவை ரௌரவம், கும்பீபாக முதலியன. சழக்கர்-பொல்லாங்குடையார். அவரோடு இணங்குதலும் சிவத்துரோகமாம். ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் அருளிச்செய்த அச்சப்பத்து முழுவதும் இங்கு நினைவில் கொள்ளுதற் குரியது. பசுபதி—உயிர்த்தலைவன்: சிவபெருமான்.

78. பதியும் — அழுந்திக்கிடக்கும். மோகத்தால் — ஆசையால். மானம்—பெருமை: அபிமானத்தால் எனினும் ஆம்: தலைக்குறை. மருள்—மயக்கம். தொழும்பு—அடிமைத் திறம். நிதி—செல்வம். 'சிற்றம்பலம் மேய செல்வன்கழல் ஏத்தும் செல்வம் செல்வமே' என்னும் தேவாரம் காண்க. யாங்கள் எல்லோமும்—யாங்கள் எல்லோரும்: இங்கு யாங்கள் என்றது உயிர்ப்பன்மையை. "........எவ்வுயிர்க்கும் எளியேற்கும், மன்னவனீ நாயகனுடு மாறிழைப்ப தெனக் கழகோ, உன்னடிக்கீழ் மெய்த்தொண்டு பூண்டுரிமைப் பணி செய்வேன், தன்னிடத்தில் இவ்வாறு சாமீநின் திருவருளே.'' எனவும்,

"வடிவாளி விடையேறு மணைவியென நினக்குறுப்பாம்
அடியேனை எதிர்ப்பதுநின் அருட்பெருமைக்
[கொல்லுவதோ
குடியோடு மெனையடிமை கொண்டாயின்
[றெனக்கிரங்காய்
கடியாழி விடமயின்ற கண்டாநின் னடிபோற்றி"

எனவும்,

கண்ணபிரான் கூற்ருகக் காஞ்சிப்புராணம் — வாணீசப் படலத்து வருதல் நோக்கி யறிக.

79. மனத்தகத்து வைத்துத் தியானிக்கும்படி இது.

80. கொண்டல்—நீருண்ட மேகம். கூற்றுவன்—இயமன். கண்டம்—கழுத்து, அஃதாவது தொண்டை. ஐ—கோழை. "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட் டைம்மே லுந்தி, அலமந்த போதாக அஞ்சேலென் றருள் செய்வான்......" எனத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் தேவாரத்தில் அருளியமை காண்க. அறிவு கலங்குவதற் குரிய அந்திம திசையில் உமது திருவடியை வழுத்த இயலாது: ஆகலின், இன்றே அடைக்கலம் என்று அருளுகிருர்கள்.

81. எல்லாமாய் அல்லதுமாய் இருக்கும் நிலை கூறுகிறது. இம்மை மறுமை ஆகிய இருமையும். எழுமை—ஏழ்பிறப்புக் களிலும். உடையவன்— ஆளாக உடையவன் என்க.

82. "போகியா யிருந்துயிர்க்குப் போகத்தைப்
புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியானுற் போற்செய்த வினையினை
வீட்ட லோரார்"

என்ற சிவஞான சித்தித் திருவிருத்தம் இதனுடன் வைத்து ஒப்பு நோக்கி யுணர்தற்குரியது.

87. மறையவன் — பிராமணன்.

"பிராமண னீயே கடவுளர் தம்முட்
பிஞ்ஞகா வேனையோர் தம்முட்
பிராமணன் யானே" என்பது காஞ்சிப்புராணம்.

மறைவு அற வளர் அடியவர் அக அறையவன்—பொய் யில்லாத மெய்ம்மை வளர்கின்ற அடியார்களுடைய மனத்தில் எழுந்தருளியுள்ளவன் என்பது.

"கரவாகும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாகும் பெருமானை—என் மனத்தே வைத்தேனே."

தேவாரம்.

"கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தைவிட் டருத்தியோ
டுள்ள மொன்றி யுள்குவார் உளத்துளான்"

திருஞான: தே.

"மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்றன்னைப்
பொய்கலந் தார்முன் புகுதா வொருவனை"

திருமந்திரம்.

"கள்ளத் திருக்கோயில் காணலாம் கண்டீர் நும்
உள்ளத் திருக்கோயி னுள்."

என்பது மதுரைக் கலம்பகம்.

88. இச் செய்யுள் நிரல்நிறைப் பொருள்கோள். கலன்—ஆபரணம். உரி—தோல். கழுது—பேய். அடைவினர்—முறையாக வுள்ளவர். அவனி—பூமி. இடை ஏழனுருபு. இறை—எப்பொருட்குந் தலைவர்.

90. எளியன் — எளிமையை யுடையவனாகிய யான். அடியார் கூட்டம் நிறைந்த கலைசை என்க.

91. கற்சிலை—மலைவில். சிவந்த வாளியாய்—கோபித்த அம்பினையுடையவரே. அஞ்சி வந்த பாலன்—மார்க்கண்டன்.

92. வாணனூர்—வாணாசுரன். மறுவில்—குற்றமில்லாத. குட முழக்கிட—குடமுழா என்னும் வாத்தியத்தை முழக்க. சடிலம்—சடை. திருமால் பதினாயிரம் தேவ வருடம் மைந்நாக பர்வதத்திலே அரியதவம் செய்தமையால் சிவபிரான்

காட்சி தந்து உனக்கு வேண்டுவது யாது? அதனைக் கேள் என்ன, அவர் வேண்டியபடி திருமாலுக்குத் தந்த வரத்துள்ளே 'நான் வந்து நின்னோடு போர் செய்யினும் நீயே வெல்வாய்' என்று அன்று அருளிய வரம் பொய்யாகாமல் இன்று பலர்க்கும் அதனை வெளிப்படுத்தினர் என்பது வரலாறு. காஞ்சிப் புராணம்—வாணீசப்படலம் காண்க.

95. எய்ப்பில் வைப்பு—சேமநிதி.

97. ஈறிலாப் புராணன் — முடிவில்லாத பழமை யுடையவன்.

98 மாய வாழ்க்கை பொறுக்கிலேன்—மாயை காரிய மாகவுள்ள இப்பிரபஞ்ச வாழ்க்கையைப் பொறுக்க மாட்டேன். பிறவி நீக்கித் திருவடிக்கீழ் வைத்தாள வேண்டும் என்பது குறிப்பு.

99. சிவபிரானே! திரிபுரம் எரித்தபோது திருமாலை அம்பாகவும், இடபமாகவும், மனைவியாகவும் பயன்படுத்திக் கொண்டீர், அவர் உள்ளத்தைக் கோயிலாக் கொண்டீர் உடம்பிற் பாதியும் ஈந்தீர், கண்ணிடந்து அர்ச்சிக்க சக்கரப் படையும் வழங்கினீர் என்க. இவ்வாறு எல்லா வகையிலும் திருமால் இறைவற்குப் பயன்பட்டார் என்றபடி. 78—ஆவது செய்யுட் குறிப்பும் பார்க்க.

"வரைக்கனக சாபசோண கிரிப்புனித காலகால
மதிக்கு நெடுமாயர் போலவே
தரைக்குளினி யாரியாவர் அவர்க்குமுனி லாமல்நீடு
தழற்சிகரி யாக னீதியோ

விரைக்கமல ஓடையாவர் புரத்தைமுனி பாணமாவர்
  விரித்தகொடி யாவ ரீதலால்
இரக்குமனை தோறுமேறி நடத்துமெரு தாவர்மேவி
  இடத்திலுறை தேவியாவரே."

என்னும் திருவருணைக் கலம்பகச் செய்யுள் நோக்கி இச் செய்யுட் பொருளை அறிக.

குறிப்புரை முற்றிற்று.

---

ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் மலரடி வாழ்க.

ஸ்ரீ மெய்கண்ட தேவர் மெல்லடி வெல்க.

திருச்சிற்றம்பலம்.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# செய்யுள் முதற் குறிப்பு.

( செய்யுள் எண் )


| | | | |
|---|---|---|---|
| அண்டரண்ட | 23 | உத்தியரா | 12 |
| அரகர கரவென | 84 | உய்யும்படி | 2 |
| அருவின னுருவின | 81 | உன்னுமுன் கடலு | 74 |
| அருவுருவங் | 11 | எங்குநோக்கினு | 93 |
| அருண் மடைதிறந் | 79 | எந்தைநீயெமக் | 95 |
| அருள்வழிநடந்து | 57 | எவனுலகுயிர் | 89 |
| அவமேவிளைத்து | 66 | எளியனேனறி | 59 |
| அவனவ ளதுவெனு | 82 | என்மனமேவு | 44 |
| அற்புதக்கலைசை | 51 | என்பினைநரம்பா | 73 |
| அன்றுதொட்டின்று | 52 | என்னையுமாளு | 42 |
| ஆண்டவன் றன்னை | 77 | என்னையுமுனையு | 60 |
| ஆண்டாய் நீ | 16 | ஐயனேயடி | 97 |
| ஆமையினோடணி | 45 | ஒருகற்பத்தினி | 36 |
| ஆயிரஞ்சிர | 33 | கருணையாளனே | 96 |
| ஆவகையன்பரை | 43 | காரணகாரணனுங் | 50 |
| இதுவன்றி வேறு | 68 | காவாய்சிவனே | 9 |
| இலவிதழ் மடநடை | 85 | கிடையாதபெரு | 14 |
| இறவொடுபிறவி | 90 | குழைத்தெனை | 46 |
| இறையவனிறை | 87 | கைகள்கொண்டு | 28 |
| இறையுந்தரியே | 7 | கொண்டலுரிஞ் | 49 |
| இறையென்றுநம்பி | 63 | கொண்டல்போன் | 80 |
| ஈசனே திருக் | 100 | கொண்டனையென்னை | 55 |
| உடைந்துநைந்து | 21 | சடைமுடியரவணி | 88 |
| உண்ணிறையமுதே | 58 | சரணம்புகும் | 10 |

| | |
|---|---|
| சிதம்பரேசர் | 22 |
| சிரித்தெரித்தனை | 40 |
| சிவந்தமேனி | 91 |
| சிவந்தாருமாவர் | 65 |
| சிவனெனுமொழி | 76 |
| சுரிகுழன்மடவா | 72 |
| செயலெலவரறிபவர் | 83 |
| செல்வமென்ன | 24 |
| சைவத்தில்வந்து | 67 |
| தமைத்தெளிவோர் | 48 |
| தமோகுணத்தினி | 32 |
| திருமால்பிரமன் | 1 |
| தேருய்கலைசை | 5 |
| தொல்லைவினைத் | 17 |
| நகவலர்திரிபுர | 86 |
| பதிகடொறுஞ் | 19 |
| பதியுமோகத்தான் | 78 |
| பரந்தெழுந்து | 26 |
| பரந்தெழுமுன் | 15 |
| பருமாலை —— | காப்பு |
| பழங்கணுற | 18 |
| பான்மதிசூடு | 47 |
| பிறப்போடிறப்பி | 62 |
| புகழ்ந்தவருக் | 41 |
| புதியான்பழையான் | 3 |
| போற்றிசெங்கதிர் | 38 |
| போற்றிபோற்றியெ | 94 |
| போற்றிபோற்றிபே | 98 |
| போற்றிலேன் | 53 |
| மண்ணீர்விசும்பு | 69 |
| மல்கும்புலவேடர் | 8 |
| மனக்கருங்குரங் | 75 |
| மனைமக்கள் | 6 |
| மாயனைக்கணை | 99 |
| மாயனுயினை | 31 |
| மாய்வதும் | 29 |
| மாறிலாக்கருணை | 54 |
| மாறினேன்சமய | 56 |
| மான்போலும் | 13 |
| முக்குணங்களின் | 34 |
| முதலென்பதின்றி | 64 |
| யானென்றும் | 20 |
| வல்லவண்ணம் | 25 |
| வல்லவானவர் | 37 |
| வல்லாண்மை | 4 |
| வள்ளெலென்று | 27 |
| வனந்தோறலைந்து | 70 |
| வாணனூர்மனச் | 92 |
| வாழ்வுமிக்க | 30 |
| வானுளோர்களு | 39 |
| விடரொடுதூர்த்தர் | 71 |
| விண்ணவர்க்கெலா | 35 |
| வேயொன்றுதோளி | 61 |

உ

சிவமயம்.

# திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து ஞானதேசிகர்கள்.

1. ஸ்ரீ நமச்சிவாய தேசிகர்.
2. ,, மறைஞான தேசிகர்.
3. ,, அம்பலவாண தேசிகர்.
4. ,, உருத்திரகோடி தேசிகர்.
5. ,, வேலப்ப தேசிகர்.
6. ,, குமாரசுவாமி தேசிகர்.
7. ,, பிற்குமாரசுவாமி தேசிகர்.
8. ,, மாசிலாமணி தேசிகர்.
9. ,, இராமலிங்க தேசிகர்.
10. ,, வேலப்ப தேசிகர்.
11. ,, பின் வேலப்ப தேசிகர்.
12. ,, திருச்சிற்றம்பல தேசிகர்.
13. ,, அம்பலவாண தேசிகர்.
14. ,, சுப்பிரமணிய தேசிகர்
15. ,, அம்பலவாண தேசிகர்.
16. ,, சுப்பிரமணிய தேசிகர்.
17. ,, அம்பலவாண தேசிகர்.
18. ,, சுப்பிரமணிய தேசிகர்.
19. ,, வைத்தியலிங்க தேசிகர்
20. ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள்.

உ

சிவமயம்.

## ஆதீன வெளியீடுகள்.

1. முத்தி பஞ்சாக்கர மாலை.
   பஞ்சாக்கர தேசிகர் மாலை.
   பதவுரைகளுடன். (இரண்டாம் பதிப்பு)
2. ஞான பூஜா விதி. (பழையவுரையுடன்)
3. நல்லூர் மாசி மகோற்சவ வைபவம்.
   (இரண்டாம் பதிப்பு)
4. மண்ணிப்படிக்கரை ஸ்தல மகாத்மியம்.
5. திருவிடைமருதூர்க் காருண்யாமிர்த
   தீர்த்த மகிமை, புஷ்யதீர்த்த மகிமை.
   (இரண்டாம் பதிப்பு)
6. இராமாயண தாற்பரிய சங்கிரகம்.
   (உரையுடன்)
7. ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் மீது
   தோத்திரப்பா. (உரையுடன்) I
8. சிவஞான போதம் (சூத்திரமூலமும்-உரையும்)
9. சித்தாந்த மரபு, சித்தாந்த மரபு கண்டனம்.
   சித்தாந்த மரபு கண்டன கண்டனம்.
   (குறிப்புரையுடன்)
10. ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தி மும்மணிக்கோவை.
11. திருநெல்வேலித் தேவாரப் பதிகம்.
    (உரையுடன்)
12. ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் மீது
    தோத்திரப்பா. (உரையுடன்) II.
13. சைவ சமயம்.
14. பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி. (உரையுடன்)
15. சித்தாந்தப் பிரகாசிகை. (குறிப்புடன்)
16. சுதந்திரத் திருநாள்.

17. கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது. (உரையுடன்) டாக்டர். ஸ்ரீ உ. வே. சா.

18. திருச்செந்தூர்—கடற்கரை முருகன் கோயில். (ஆங்கிலம்)

19. ஞான சூடாமணி.

20. சிவஞான போதச் சிற்றுரை. (அச்சில்)

ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள்.

21. சுவாமிநாத தேசிகர் பிரபந்தத் திரட்டு.

(அச்சில்)

22. பூப்பிள்ளை அட்டவணை, ஸ்ரீ பஞ்சாக்கர சிந்தனை. ஞானபூசா விதி. (வசனம்)

23. சதமணிக் கோவை—

பழைய பொழிப்புரையுடன்.

24. திருவள்ளுவ நாயனாரும், பெரிய புராணமும். (ஆராய்சசி)

25. சமயம். (ஸ்ரீ சபாபதி நாவலர்)

26. திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம்

(குறிப்புரையுடன்)

27 அத்துவித வாக்கியத் தெளிவுரை.

28. சிவஞான போதம். (வடமொழி தமிழ்மொழி சூத்திரம் பதவுரைகளுடண்)

29. திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ்.

(குறிப்புரையுடன்)

30. சிவஞான சித்தியார் (ஆராய்ச்சி)

31. திருப்பள்ளியெழுச்சி பதவுரை

32. முத்தி பஞ்சாக்கர மாலை, ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தி தாராட்டு, திருவாவடுதுறைத் தேசிக சோபனம் முதலியன.

33. ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் பிரபந்தங்கள் I (குறிப்புரையுடன்)

உ

சிவமயம்.

# விரைவில் வெளிவரச் சித்தமாயிருப்பன.

---

1. திருவாவடுதுறை யமகவந்தாதி. (பதவுரையுடன்)
2. தணிகைப் புராணவுரை.
3. திருவாவடுதுறைப் புராணம்.
4. திருவீழிமிழலைப் புராணம்.
5. சிவஞான போத சிந்தனை.
6. சிவஞான போத திராவிட மாபாடியம்.
7. இலக்கணக் கொத்து.
8. தொல்காப்பியப்பாயிரவிருத்தி, முதற் சூத்திர விருத்திகள்.
9. இலக்கண விளக்கச் சூறாவளி.
10. ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் பிரபந்தங்கள். II. (குறிப்புரையுடன்)
11. கவிராக்ஷஸ—ஸ்ரீ கச்சியப்பமுனிவரர் பிரபந்தங்கள். (குறிப்புரையுடன்)
12. மதுரகவி — தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் பிரபந்தங்கள். (உரையுடன்)
13. சிவஞான போதம் பாண்டிப்பெருமாள் விருத்தி.

ஔவை தி.க. சண்முகம் நூலகம்,
எண்:
எண்:

ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரஸ், கும்பகோணம்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 3124
நன்கொடை எண்: 3124